# ஆற்றல்

## International Current Affairs

**1**

## சர்வதேச சமகால செய்திகள்

**— ஆய்வுகள், அபிப்பிராயங்கள், பின்னனிகள் —**

ஆதாரம்

- TIME
- NEWSWEEK
- ASIAWEEK
- ECONOMIST
- READER'S DIGEST
- SPORTSSTAR
- BBC — London, UK
- VOA — Washinaton, USA
- DW — Cologne, Germany
- RN — Hilversum, Netherlands

Mrs. A. Sellam Singam

உள்ளடக்கம்


- அங்கை ??? என்னவாம்?!!
- செய்திகளின் பின்னணிகள்
- ஏன் . . . எப்படி ???
- SPORTS STORIES
- சிறு கதைகள்


**பொது அறிவு - சர்வதேச செய்தி**

46 பக்கம் 10/-

# எமது ஆலோசகருக்கு . . .

அறிவும், ஆற்றலும் மறைந்திருந்த ஓர் சிலரை ஒன்று திரட்டி ஓர் சனிக்கிழமை, மதியவேளை 'ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம்' உருவாகியது.

இவ் அமைப்புக்கு ப. சுகராஜா தலைவராகவும், 'ஆற்றல்' என்னும் பெயர் சூட்டிய வா கலாதரன் மார்சலீன் அன்ரன் ஆகியோர் செயலர்களாகவும். சுந்தரமூர்த்தி சிவபாலன் பொருளாளராகவும் ஏனைய செயற்குழு அங்கத்தவர்களுடைய ஒத்துழைப்புடன் இலாப நோக்கமற்ற 'ஆற்றல்' சஞ்சிகையை மாதாந்தம் வெளியிட்டனர்.

சர்வதேச சமகாலச் செய்திப் பகுதியை விரிவாக்க வேண்டும் என்ற பலரது வேண்டுகோளினால். புதிய பாணியில் இவ் இதழ் வெளிவருகின்றது.

எம்மை இப் பணியில் ஊக்கமும் ஆலோசனையும் தந்து தொடக்கிவிட்டு. யாழ் மகளிர்க்கென ஓர் அமைப்பை உருவாக்கினார் எமது ஆசான் 'திருவாளர் திருஞானம் திருலிங்கநாதன்' அவர்கள்.

இவர் அரசாங்க SLAS சேவையினது Class I பிரிவில் சேவை புரிந்து. இளைப்பாறியவர்.

அரசாங்க பலமைப் பரிசுக் கிட்டத்தில் 16 நாடுகள் சென்றவர். எமது மூன்று பாஷைகளையும் கற்ற இவரே இலங்கை அரசாங்கத்திற்கு Programme Budget முறையை அறிமுகப்படுத்தியவர்.

'யாழ் மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம்' என்பதே இவர் உருவாக்கிய மறு அமைப்பு.


எழுநூறு அங்கத்தவர்களைக் கொண்ட இதனை மகளிர் விவகார அமைச்சில் பதிந்து 1200 மகளிருக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டது

இவ் அமைப்பிற்கு செல்வி தற்பரன் வத்சலா, தலைவர்; திருமதி ரேவதி அம்பலவாணர் — பாலேந்திரா, உப தலைவர்; செல்வி பாலசிங்கம் பானுமதி செயலாளர். இவர்களுடன் செயற்குழுவும் இணைந்து திறம்படச் செயற்படுகின்றனர்.

எம்மை வழி நடாத்திய பெரியவர் திருலிங்கநாதன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

— ஆசிரியர்

# அங்கை... என்னவாம்?!!



சர்வதேச சமகால செய்திகளை நாம் பல ஊடகங்ள் மூலம் பெற்றுத் தொகுக்கின்றோம்.

இவ் ஊடகங்கள் முன் அட்டையில் காணப்படுகின்றன.

ஓர் சம்பவத்தை தத்தமது பிரத்தியேக கோணங்களில் இருந்து வர்ணிப்பர். இவற்றைக் இரகித்துத் தொகுப்பதால், ஓர் குறித்த ஊடகத்லை ஆதாரமாகக் குறிப்பிட இயலாது. பின்னணிப் பகுதியில் ஓர் நபரது / நாட்டினது விபரங்கள் ஓர் முறையே பிரசுரிக்கப்படும்.

இவ் இதழ் வெளியாகி உங்கள் கைக்கு வந்தடைய முன்னர், சில திருப்பங்கள் நேர்ந்திருக்கும்.

இவற்றை எதிர்வரும் இதழில் தவறாது Update செய்வோம்

## 01. Mayanmar (முன்னைய Burma)

சென்ற மாதம் (25 August) அங் ஸான் சூ. கீ. அம்மையார் தலைநகர் றங்கூனில் இருந்து இரு கார்களில் தனது சகாக்களுடன் பிரயாணமானார். கிராமப் புறங்களில் உள்ள தனது கட்சி ஆதரவாளர்களைச் சந்திப்பதே நோக்கமாகும்.

30 மைல்கள் தாண்டியதும், பொலிஸ் துரத்தி வந்து வழி மறித்துத் தடுத்தனர். இவரது பாதுகாப்பிற்காகவே நாம் தடுத்தோம் என இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்தனர். இதனை எந்தவொரு அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தடுத்து நிறுத்திய இடத்திலேயே 07 நாட்கள் தரித்து நின்றார். பின்னர் உடல் நிலை காரணமாக தனது இல்லத்திற்குத் திரும்பினார்.

இது முதற் தடவை அல்ல. இரு வருடங்களிற்கு முன்னர் தடுத்து நிறுத்திய இடத்திலேயே 17 நாட்களைக் கழித்தார். அதற்கு முன்னரும் 04 தடவைகள் தலைநகருக்கு வெளியே செல்ல விடாது தடுத்துள்ளனர்.

இராணுவ ஆட்சியாளர் இவரைத் தடுப்புக் காவலில் இருந்து விடுவித்தாலும், தலைநகருக்கு வெளியே செல்ல அனுமதிப்பதில்லை.

இதனை ஒரு BBC நிருபர்: "இராணுவத்தினர் இவரை தங்கக் கூண்டிற்குள், பக்குவமாக வைத்திருக்கும், ஓர் அழகான மயிலை போன்று கவனிக்கின்றனர்" என வர்ணித்தார்.

## 02. Philipines

இந் நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள Mindano தீவிலும் அதனை அண்டிய சில தீவுகளிலும் இஸ்லாமிய மதத்தினர் உள்ளனர். இங்குள்ள சில குழுக்கள் சுதந்திரம் கேட்டு போராடுகின்றனர்.

வடக்கில் உள்ள தலைநகர் Manila வில் ஜனாதிபதி Joseph Estrada, கத்தோலிக்க பெரும்பான்மை மக்களது ஆதரவில், ஆட்சிபுரிகின்றார். மனிலாவுக்கும் மின்டனோவிற்கும் 800 கிலோ மீற்றர் தூரம் உள்ளது.

சென்ற ஏப்பிரல் மாதம் வேகப் படகுகளில் சென்ற ஆயுதம் தாங்கியோர், மலேசியா நாட்டிற்குச் சேர்ந்த போர்னியோ தீவில் இருந்து, 21 வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைப் பிடித்துச் சென்றனர்.

கடத்தல்காரர்கள் Abu Sayaaf என்னும் குழுவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மறியலில் இருக்கும் தமது சகாக்களை விடுவிக்கும் படி அரசாங்கத்தைப் பணித்தனர். அத்துடன் அமெரிக்காவில் மறியலில் உள்ளவரையும் விடுவிக்க வேண்டும் என்றனர்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி இராணுவத்தை அனுப்பினார். இவர்களோ இரு கைதிகளைச் சிரச் சேதம் செய்வோம் என அறிவித்தனர். இராணுவம் பின்வாங்கப்பட்டது.

பேச்சுவார்த்தை தொடங்கி, 04 மாத கால கட்டத்தில், படிப்படியாக கைதிகள் விடுவிக்கப்பட்டனர். தலா 01 மில்லியன் அமெரிக்க டொலர் இரயப் பணமாக கொடுக்கப்பட்டதாம்.

## 03. Cambodia

தென்கிழக்கு ஆசிய நாட்டுப் பிரதமர் Hung Sen மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட Pol Pot அரசினது முன்னைய Khmer Rouge அங்கத்தவர்களை விசாரணைக்கு உட்படுத்தத் தயங்குகின்றார்.

சரணடையும் கெம்மர் ரூஜ்படை வீரர்களை இராணுவத்தில் சேர்ப்பதால், கம்போடிய நாட்டு இராணுவம் தேவைக்கதிகமாகப் பெருகி, நாட்டினது பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்கின்றது.

## 04. Russia

சென்ற மாதம் ரஷ்ய மக்களை அதி கலங்க வைக்கும் இரு சம்பவங்கள் நடந்தன. ஒன்று அணுசக்தியில் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல் நீர் மட்டத்திற்கு வரமுடியாது கடல் தளத்திலேயே 118 பணியாளர்களுடன் தாழ்ந்து மரணித்தது.

மற்றது 1960ல் கட்டப்பட்டபோது உலகத்திலேயே மிக உயரமானது என பெருமையுடன் வர்ணிக்கப்பட்ட, Moscow நகரத்து Television கோபுரம்; தீக்கிரையானது.

இதன் பின்னர் மக்களுக்கு விடுத்த அறிக்கையில் ஜனாதிபதி Vladimir Putin : எமது நாட்டின் பெருமைக்குரிய கோபுரம் எரிந்தது போன்று வேறு அனர்த்தங்களும் தவறாது நடைபெறும். எமது நாட்டினது பராமரிப்பு நிலைமையே இது எடுத்துக் காட்டுகின்றது. எமது நாட்டினது பொருளாதார நிலைமை மேம்படுத்தாது போனால் தொடர்ந்து இத்தகைய அனர்த்தங்கள் நடக்கும், என்றார்.

ரஷ்யாவின் வடக்கே Barents கடலில் தாழ்ந்த அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பலில் இருந்த அணுக் கதிர்கள் கசியக் கூடும் என ஐயம் தெரிவித்தனர் விஞ்ஞானிகள்.

'அப்படி ஒன்றும் நடக்க மாட்டாது.' என அடித்துக் கூறினர் ரஷ்யர்கள்.

April 1986-ல் நடந்த Chernobyl மின் அணு உலை அனர்த்தத்தில் 300,000 மக்கள் பாதிக்கப்பட்ட போது, 30 நபர்களே பாதிக்கப்பட்டனர் எனப் பொய் உரைத்த நாடு எப்போது உண்மையை மறைக்காதது என்றனர் அனுமானிகள்?

Television கோபுரம் எரியக் காரணமாகிய மின் ஒழுக்கு ஏற்படக் காரணம் என்ன? காலக் கிரமத்தில் தேவைக்கேற்ப திருத்த வேலைகள் செய்யாததே!

மாதக் கணக்காக அரசாங்க ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க இயலாத அரசாங்கம் எப்படித் திருத்த வேலைகளுக்கு பணம் ஒதுக்கும்? என வினவுகின்றனர் நோக்கர்கள்.

நீர் மூழ்கிக் கப்பல் தாழ்ந்ததற்கு ரஷ்ய விவகாரம் அவதானிப்போர் கூறுவது யாதெனில்; வழமை போல இரு கப்பல்கள் சேர்ந்து சென்று சில பயிற்சிகளில் ஈடுபட்டன. நீர்மூழ்கிக் கப்பல்களை தாக்கும் ஏவுகணை ஒன்றினை எதிர்பாராது, அசம்பாவிதமாக, ஓர் கப்பல் ஏவிவிட்டது. இவ் ஏவுகணையே தாழ்ந்த கப்பலைத் தாக்கி செயல் இழக்கச் செய்துள்ளது.

இதற்கு ரஷ்ய கடற்படை பிரதிநிதி, 'அப்படி ஒன்றும் நடக்கவில்லை. நாம் முன்பு கூறியது போல ஓர் படகுடன் மோதியதாலேயே இந்த அசம்பாவிதம் நடந்தது, என வற்புறுத்தியுள்ளார்.

## 05. Russian Presidents

Mikhail Gorbachev 1991-ம் ஆண்டு கிறிஸ்மஸ் (25 December தினமன்று சோவியற் ஒன்றியத்தினது ஜனாதிபதியாக பதவி விலகும் போது ஒன்றியத்தினது முடிவையும் பிரகடனம் செய்தார்.

இதன் பின்னர் பதவி ஏற்ற Boris Yeltsin ரஷ்யர்களது பரம்பரை எதிரி மாநிலமான Chechenya மீது ரஷ்ய படைகளை ஏவினார். செசென்யா தலைநகரான Grozny யுள் பிரவேசிக்க முனைந்த போது 1,000 படையினரைக் கொண்ட பிரிவொன்றினை செசென்யர் முற்றாக அழித்தனர். ரஷ்ய இராணுவம் போரை நிறுத்தி பின்வாங்கியது.

ஜனாதிபதி யெல்ற்ஸின் ஓர் குடிகாரர். இருதய நோயிற்கு சத்திர சிகிச்சை செய்து கொண்டவர். மூன்று பிரதம மந்திரி

களை பதவி நீக்கம் செய்தவர் இறுதியாக Vladimir Putin னை பிரதம மந்திரியாக நியமித்தார்.

சில மாதங்களின் பின்னர் ரஷ்ய தலைநகரான Moscow வில் 04 குண்டுகள் வெடித்ததால் பல மக்கள் இறந்தனர். பலர் காயமுற்றனர். மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இக் குண்டுகளை செசென்யரே வைத்தனர் என அரசாங்கம் குற்றம் சாட்டியது.

செசென்யா தாம் இக் குண்டுத் தாக்குதல்களுக்குப் பொறுப்பல்ல என வன்மையாக மறுத்தது. பரம்பரையாக செசென்யரை வெறுத்த ரஷ்ய மக்கள் அரசாங்கத்தினது கூற்றையே விரும்பி ஏற்றுக் கொண்டனர்.

அரசியல் நாடி பார்த்த யெல்ற்ஸின் ரஷ்ய படைகளை செசென்யா மீது ஏவினார். ரஷ்ய மக்களும் இதனை பெரிதும் வரவேற்றனர். 1994ம் ஆண்டு பின்வாங்கிய இராணுவம் 05 வருடங்களின் பின்னர் மீண்டும் ஆர்ப்பரிக்கத் தொடங்கியது.

சுகயீனமான யெல்ஸ்ரின் உலக நாட்டுத் தலைவர்கள் எவரும் எதிர் பார்க்காதவாறு, சடுதியாக, 31.12.1999 அன்று இராஜினாமா செய்தார். அடுத்த தேர்தல் வரை தமது 48 வயது கொண்ட பிரதம மந்திரியான விளாடிமிர் புரின் பதில் ஜனாதிபதியாக இயங்குவார் எனப் பிரகடனம் செய்தார்.

பதில் ஜனாதிபதி புரின் செசென்யா போரை வெகு உக்கிரகமாக நடாத்தினார். 1½, 02 தொன் குண்டுகளை ஆகாய மார்க்கமாக ரஷ்ய விமானப் படை க்றோஸ்னி நகர் மீது பொழிந்து தரை மட்டமாக்கியது. 1000க் கணக்கானோர் கொல்லப்பட்டனர், லட்சக் கணக்கில் மக்கள் அகதிகளாகி அல்லற்பட்டனர்.

செசென்ய மக்களது அல்லலில் குதூகலித்த ரஷ்ய மக்கள் சென்ற மார்ச் மாதம் நடந்த தேர்தலில் பதில் ஜனாதிபதி விளாடிமிர் புரின் னை ஜனாதிபதியாக தேர்வு செய்தனர்.

ரஷ்யப் படைகள் கொடூரமான மனித உரிமை மீறல்களை புரிகின்றனர் என ஐநா மனித உரிமை அத்தியட்சகர் Mary Robinson ரஷ்யா சென்று அரசிடம் கூறினார் ரஷ்ய வெளிநாட்டு விவகார மந்திரி Igor Ivaov தமது நாட்டு விவகாரத்தில் தலையிட வேண்டாம், என்று தூக்கியெறிந்து சொல்லி விட்டார்.

ஐரோப்பா வை சர்வதேச பயங்கரவாதத்தில நின்று ரஷ்யா காப்பாற்றுகின்றது. ஆனால் இக்கடமையை செய்யும் எம் மீது வீணாக குற்றம் சுமத்துகின்றனர் என ஜனாதிபதி விளாடிமிர் புரின் வாதித்தார்

செசென்யா மக்கள் தேர்ந்த ஜனாதிபதி Aslan Maskhadon சமாதானத்திற்காக ஓர் தீர்மானத்தை ரஷ்யாவிடம் சமர்ப்பித்தார். இவரது கோரிக்கையை ஏற்காத ரஷ்யா தீர்மானத்தில் திருத்தங்கள் செய்து அஸ்லான் மஸ்கடோவ் இடம் திரும்ப அனுப்பியுள்ளது.

செசென்ய மக்கள் படும் அல்லல் கொஞ்சநஞ்சமல்ல!

# 06. Chile

தென் அமெரிக்காவினது மேற்குக் கரையோரத்தில் இருக்கும் சிலி நாட்டில் 11 03 2000 அன்று Ricardo Lagos ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

இம் மலைப் பிரதேச நாடு 1990-ம் ஆண்டிலேயே சர்வாதிகாரியான General Augusto Pinochet யினது பிடியிலிருந்து விடுபட்டது. இவ் விடுவிப்பில் ரிக்காடோ லாகோஸ் பெரும் பணியாற்றினார்.

சர்வாதிகாரியான அகொஸ்ரோ பினோஷே சிலி நாட்டு இராணுவத் தளபதியாக பதவி வகித்தவர். அக்காலத்தில் மக்களால் பெரிதும் விரும்பி அமோக வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இடதுசாரியான Salvador Allende.

இவர் பதவியேற்ற சொற்ப காலத்தில் வலதுசாரியான பினோஷே யுத்தத் தாங்கிகளினாலும், விமானங்களினாலும் ஜனாதிபதியின் அரண்மனையைத் தாக்கினார். இத் தாக்குதல் சமயம் ஜனாதிபதி அலண்டே இறந்தார்? இவ்வாறே 11. 09. 1973 ல் பினோஷே பதவியைக் கைப்பற்றினார்.

ஆயிரக் கணக்கான அரசியல் எதிரிகளை அழித்த பின் 1980 ல் புதிய அரசியல் யாப்பு ஒன்றினை உருவாக்கினார். இதில் மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கின. அவையாவன

1; ஜனாதிபதி இராணுவத் தளபதியையோ, உப தளபதியையோ பதவி நீக்கம் செய்ய அதிகாரம் இல்லை.

(தொடர்ச்சி 25ம் பக்கம் பார்க்க)

# ஏன்?...

# எப்படி?!



விநோகா துரைசிங்கம்,
யாழ் நகர்:

கே: பெண்களுக்கு 'சம உரிமை' கொடுக்காத சமயங்களையும் சமபிரதாயங்களையும் நாம் மதிக்க வேண்டுமா?

பதில்: இல்லவேயில்லை! ஓர் கத்தோலிக்கன் கோவிலுக்குப் போவதில்லை. கத்தோலிக்க சமயம் செய்த கொடுமைகளை வாசித்தவன்; சென்ற வருட இறுதியில் தான், கத்தோலிக்க தலைவரான போப் ஆண்டவர் தமது சமயம் இழைத்த தீங்குகளுககாக பொது மன்னிப்பு வேண்டினார். கடவுளின் பெயரால் சகல சமயங்களும், சமுதாயத்தின் பெயரால் சில சம்பிரதாயங்களும், பெண்களுக்கு 'சம உரிமை' தருவதில்லை. இதைத் தீர்க்க எமது மனதில் உண்மை, உறுதி, துணிச்சல் வேண்டும்.

கா. அருள்நந்தி, உரும்பிராய்.

கே: 'ஆற்றல்' பத்திரிகையில் y2k பற்றி வெளிவந்தது: அதல் k என்பது 1000 த்தைக் குறிக்கும் என இருந்தது; 'ஜாமக்காரன்' என்னும் இதழில் (1999 ம் ஆண்டு 10-ம் மாதம்) k என்பது கிலோ (Kilo) அல்ல, அது றோமன் இலக்கங்களில் k என்னும் சின்னம் 1000 த்தைக் குறிக்கும் என்று இருந்கதே இதற்கென்ன சொல்வீர்?

பதில்: 'ஆற்றல்' சரி. 'ஜாமக்காரன்' கில்லாடி. றோமன் இலக்கச் சின்னங்களில் k இல்லை; ஆகவே k என்பது கிலோ (Kilo) வையே குறிக்கும். Encyclopedia வின் பிரகாரம்: றோமன் இலக்கங்களில் 07 அடிப்படைச் சின்னங்கள் உண்டு. அவையாவன:

I=1, V=5, X=10, L=50, C=100, D=500, M=1000. K இல்லவே இல்லை. நான் பார்த்தது போல நீரும் வாசிகசாலையில பார்க்கலாமே! உமது 'ஜாமக்காரன்' ஆசிரியரையும் பார்க்கச் சொல்லும்!;

ச. பவழராணி, சில்லாலை.

கே: அமெரிக்க முன்னைய ஜனாதிபதி Richard Nixon இராஜினாமா செய்தார். அவரது உப ஜனாதிபதியும

இராஜினாமா செய்தார் என்கிறாளே எனது நண்பி. உண்மையா?

பதில் : Nixon க்கு இரு உப ஜனாதிபதிகள் இருந்தனர். நிக்ஸனுடன் தேர்தலில் வென்றவர் Spiro Theodore Agnew. இவர் Maryland என்னும் மாநிலத்தில் கவர்னர் ஆக பதவியில் இருந்த காலத்தில் ஊழல் புரிந்தார் என்ற குற்றச்சாட்டினால் 1973 ல் இராஜினாமா செய்தார்.

Watergate ஊழல் காரணமாக நிக்ஸன் இராஜினாமா செய்யும் போது, இரண்டாவது உப ஜனாதிபதியான Gerald Ford ஜனாதிபதியானார். இவரிடம் தனக்கு மட்டும் 'மன்னிப்பு' வழங்கும் படி பேரம் பேசியதால், நிக்ஸனைத் தவிர ஏனைய சகாக்கள் 13 நபர்கள் சிறை சென்றனர்.

ச. சுந்தரமூர்த்தி,
சங்கரத்தை, அராலி.

கே : பிரித்தானிய மகாராணியான இரண்டாவது எலிஸபெத் என்பவரது தாயார் 100 வயது நிரம்பியவராமே?

பதில்: ஆம். அவருக்கு 100வயது தான். Elizabeth Bowes - Lyon என்னும் பெயர் கொண்ட இவர் 1923ல் 5வது ஜோர்ஜ் மன்னனது இரண்டாவது மகனான ஜோர்ஜ் என்பவரை திருமணம் செய்தார் மூத்த மகனான 8வது எட்வர்ட் மன்னன், திருமணரத்து செய்த பெண்மணியைத் தான் திருமணம் செய்ய விரும்பியதால் பதவி துறக்க நேர்ந்தது. இதனால் இரண்டாவது மகனான ஜோர்ஜ் தனது அண்ணனது பதவியில் 6வது ஜோர்ஜ் என அமர்ந்தார் 6வது ஜோர்ஜ் மன்னன் 1952ல் இறந்த போது அவரது மூத்த மகள், 2வது எலிஸபெத் என, சிம்மாசனம் ஏறினார். 2வது எலிஸபெத் மகாராணியினது தாயாரான, 100 வயதடைந்த எலிஸபெத் ராணியை, செல்லமாக Queen Mother' என அழைப்பர். குவீன் மதர்க்கு எலிஸபெத் என பெயர் இருந்ததாலும், 6வது ஜோர்ஜ் மகாராஜாவுடைய மனைவி என்பதாலும், 2வது எலிஸபெத் மகாராணியினது தாய் என்பதாலும், இவரை 1வது (முதலாவது) எலிஸபெத் மகாராணி என தவறாக சிலர் கருதுகின்றனர். முதலாவது எலிஸபெத் ராணி சுமார் 3, 4 நூற்றாண்டுகளுக்கு முன்னர் சிரச்சேதம் செய்யப்பட்டு மரணித்தவர்.

ப. கணேஷ்ஷானந்தன்,
யாழ் நகர்.

கே : இப்போது Computer Internet, e - Mail ஆகியவை வந்துள்ளன. இவற்றால் புத்தகம் படிக்கும் பழக்கம் அற்றுப் போகுமா?

பதில் : ஒரு போதும் இல்லை. Oxford University யினது

முதனாவது பெண் பேராசிரியரும், மனித மூளை விற்பன்னரும் கூறுவது சுவாரஸ்யமானது. புத்தகங்கள் எமக்கு விபரங்களைத் தரும் போது எமது கற்பனை ஆற்றலையும் தட்டி விடுகின்றன. இன்ரனெற் ஆகியவை எமக்கு ஏராளமான விஷயங்களைத் தந்தாலும், அவை எமது கற்பனைச் சக்தியை பயன்படுத்த உதவுவது இல்லை.

நாம் ஒரு விஷயத்தை விளங்கிக் கொள்ளும் போது, எமக்குக் கிடைத்த தகவலை, ஏற்கனவே எம்மிடம் இருக்கும் அனுபவத்துடன் ஒப்பிட்டே அந்த விஷயத்தை விளங்கிக் கொள்கின்றோம். இதனாலேயே ஒவ்வொருவரும் தத்தமது அனுபவங்களுக்கேற்ப ஒவ்வோர் விஷயத்தையும் வித்தியாசமாக விளங்கிக் கொள்கின்றனர்.

தொடர்ந்து ஒரு விஷயத்தில் கவனம் செலுத்தினால், மூளையின் அப்பகுதி நன்றாக விருத்தியடையும். உதாரணமாக, Professor Albert Enstien னது மூளையில் கணிதப் பகுதி மிகவும் விருத்தியடைந்ததாகக் காணப்பட்டதாம்.

க. செந்தூரன், மல்லாகம்

கே : புத்தகம் உருவான கதையென்ன?

பதில் : சீனாவில் பேப்பர் கண்டு பிடிக்கப்பட்டு, 06 நூற்றாண்டுகளாக இரகசியமாக தயாரிக்கும் முறையை மறைத்திருந்தனர். கொள்ளைக்கார அரேபியர்களால் பிடிக்கப்பட்ட பேப்பர் தயாரிக்கும் சில சீனர் மூலம் இரகசியம் அம்பலமாகியது.

இதன் பின்னர் ஜேர்மனியரும், ஆங்கிலேயரும், அமெரிக்கரும் புத்தகங்களை அச்சிடும் முறையை விஸ்தரித்தனர்.

ஜேர்மனியரான Johann Gutenberg என்பவர் 1439ல் அச்சிடும் முறையைக் கண்டு பிடித்தார். இதனை 1476ல் William Claxton என்பர், சிறிது முன்னேற்ற மாற்றங்களுடன், இங்கிலாந்துக்கு அறிமுகப்படுத்தினார்.

16ம் நூற்றாண்டில் 526,000 நூல்கள் அச்சிட்டு வெளியாகின. இன்றோ, 1,000,000 நூல்கள் ஒரு வருடத்தில் வெளியாகின்றன. அதாவது 15,000,000,000 தனித்தனி புத்தகங்கள் விற்பனையாகின்றன.

இக் கணிப்பினில் தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் உட்படவில்லை என்பதை நினைக்கும் போது! ஆச்சரியமல்லவா !

ஞா. அந்தோனி
அமலசோதி, யாழ் நகர்.

கே : சூரியன் இல்லாத போது உலகில் உயிர் இனம் இல்லாது போகும். தொடங்கியதெல்லாம் முடியத்தானே வேண்

டும்! அப்போ, சூரியன் எப்போதோ முடியத்தானே வேண்டும்?

பதில் : உமது யூகம் சரிதான்! பயப்படாது இதைக் கேளும். Solar Max என்னும் விண்வெளிக் கலத்தை, 04.04 1980ல் அமெரிக்கா 357 மைல் உயரத்தில் நின்று, 93.000,000 மைல் தொலைவில் உள்ள, 864,000 மைல் குறுக்களவு கொண்ட சூரியனை கண்காணிக்க ஏவியது. 5,000 இறாத்தல்பாரமான இக்கலத்தை உருவாக்க 80 மிலியன் டொலர்கள் செலவானதாம். நான்கு பிலியன் வருடங்கள் முன்னர் ஐதரசன் அணுக்கள் கொண்ட பாரிய முகில்கள் சேர்ந்தன. ஈர்ப்புச் சக்தியால் உள்வாங்கப்பட்ட அணுக்கள் நெருக்கப்பட்டதால், அணு உலை போன்ற முகில்களின் நடுவே, மத்தியில் எரியத் தொடங்கியது:

ஒவ்வொரு செக்கன்ட்டுக்கும் 4, 000,000 தொன் Hydrogen ஐ சக்தியாக மாற்றி எமக்குத் தரும் சூரியன், இன்னும் 10, 000. 000 வருடங்கள் மயங்காது இயங்குவாராமே! பயப்படாதேயும், நீரும் நானும் சூரியன் மங்கும்போது இருக்க மாட்டோம்.

ப. கணேஷானந்தன், யாழ் நகர்

கே : உலகின் சகல நாடுகளிலும் பெரும்பான்மை மக்களது இனமே ஆட்சி புரிகின்றது. இதற்கு விதிவிலக்குண்டா?

பதில் : உண்டு. அண்மையில் சிறந்த Syria நாட்டு ஜனாதிபதி Hafez Al Assad ஓர் உதாரணம், அது ஓர் இஸ்லாமிய நாடு. அங்கு 87 வீதம் Sunni Muslems பிரிவினர். மிகுதி 13 வீதம் Shi' ite Islam பிரிவினர். இப் பிரிவின் இன்னோர் சிறு பிரிவான Alawi Sect க்குச் சேர்ந்தவரே ஜனாதிபதி Assad.

இச் சிறுபான்மை மகன் 1928ல் பிறந்தவர். விமானப் படையில் Jet Pilot ஆக இருந்தவர். ஆளும் கட்சியான Ba'ath Party 1963ல் ஆட்சியைக் கைப்பற்ற உதவியவர். பாதுகாப்பு மந்திரியாக 1966ல் பதவி ஏற்றார். கட்சியில் பிளவு ஏற்பட்டதும், இரத்தம் சிந்தாத கிளர்ச்சி மூலம், 1970ல் ஆட்சியைக் கைப்பற்றி 30 வருடங்களாக ஆண்டவரே இச் சிறுபான்மை மகன்!!!

இ. சுஜீந்திரன்
யாழ் பல்கலைக்கழகம்

கே : பனாமா கால்வாய் பற்றி கொஞ்சம்!

பதில் : 400 வருடங்களாக Atlantic சமுத்திரத்தையும், Pacific சமுத்திரத்தையும் இணைத்து கப்பல் போக்குவரத்தை இலகுவாக்குவதே மனிதனின் கனவாக இருந்தது.

அமெரிக்காவினது இரு பிரபல்ய கட்டிடப் பொறியியலாளர்கள், இக் கால்வாயை வெட்ட இரு வருடங்கள் எத்

தனித்து விட்டு. விரக்தியில் இராஜினாமா செய்தனர். ஜனாதிபதி Theodore Roosevelt (தியடோர் றூஸ்வெல்ற்) 1907ம் ஆண்டு 02ம் மாதம் மேஜர் ஜோர்ஜ் வோஷிங்ரன் கொதெல்ஸ் என்னும் அமெரிக்க இராணுவ பொறியியலாளர் பிரிவைச் சேர்ந்தவரை, சகல தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரங்களுடன், நியமித்தார்;

எகிப்து நாட்டிலுள்ள சுவெஸ் கால்வாயை வெட்டிய, பிரான்ஸ் நாட்டு, Ferdinand de Lesseps (பெர்டினன்ட் டிலெஸெப்ஸ்) என்பவரும் இவ் விடயத்தில் பெரும் தோல்வி கண்டவர்.

47 மைல் நீளமான இக்கால்வாயில்12 Locks உள்ளன ஒரு Lockகிற்குள் கப்பல் சென்றதும், பாரிய பம்புகளால் தண்ணீர் பாய்ச்சப்படும். இதனால் நீர் மட்டம் உயர்வதால், கப்பலும் அடுத்த Lock இனது உயர் மட்டத்திற்கு உயரும்; உயர்ந்ததும் கப்பல் முன் சென்று அடுத்த Lock இனுள் உட் செல்லும். இப்படியே படிப்படியாக கப்பல் உயரத்திற்குச் சென்று பின்பு கீழிறங்கி, Gatun குளம் மூலம் மறு சமுத்திரத்தை அடைந்து பயணத்தை தொடரும்.

இக் கால்வாய் அருகில் ஒரு 'தொடர் வண்டி' பாதை செல்கின்றது. கால்வாய் வெட்டும் போது இப் பாதை மூலமே கல், மண் ஆகியவை அகற்றப் பட்டன;

ஏழு வருடங்களின் பின்னர், 08ம் மாதம் 1914ம் ஆண்டு Ancon என்னும் கப்பல் பெரும் புள்ளிகளுடன் முதன் முதல் கால்வாய் ஊடாகச் சென்றது: ஆனால் இதனை வெட்டிய George Washington Goethals, தனைடக்கத்துடன், கால்வாய் வெட்டும் வேலையைக் கண்காணிக்க தான் பாவித்த தொடர் வண்டியிலேயே Ancon கப்பலது முன்னேற்றத்தை அவதானித்த படி சென்றார்.

விளக்கம் சற்று நீண்டு விட்டது மன்னிக்கவும்.

ச. இராஜரத்தினம்
நல்லூர், யாழ்ப்பாணம்:

கே; உலகில் மிகப் பழமை வாய்ந்த நகரம் யப்பானது Tokyo (ரோக்கியோ) என்கிறான் என் நண்பன். நீர்?

பதில்: கி.மு. 3,000 வருடங்களாக தொடர்ந்து மக்கள் வசித்த நகரம் Damascus (டமஸ்கஸ்) இது சிரியா நாட்டினது தலைநகரம் இதனை அடிக்குமா உமது நண்பனது ரோக்கியோ?

து. மருதநாயகம்
சுன்னாகம்

கே; Spain நாட்டில் Basque (பாஸ்க்) பிரதேசத்திற்கு சுதந்திரம் கேட்டு போராடும் குழுவினரை ETA (எற்றா)

என அமைக்கின்றனரே! காரணம்?

பதில் : ETA என்பதன் முழுப் பெயர் Euzkadi Ta Askatasuna. இதன் கருத்து பாஸ்க் நாடும், சுதந்திரமும். இவர்களது உறுப்பினர்களை Etarras (எற்ராறாஸ்) என்பர்.

ப. குகராஜா, கோண்டாவில்.

கே : பெண்களுக்கு வாக்குரிமை பற்றி கொஞ்சம்.

பதில் : நியூஸிலண்ட் (New-zealand) நாடு தமது பெண்களுக்கு 9ம் மாதம் 1893 ம் ஆண்டு வாக்குரிமை வழங்கியது. 1894ம் ஆண்டில் தெற்கு அவுஸ்ரேலியா (South Australia) மாநிலம் பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது. இதன் பின்னரே ஏனைய நாடுகள் படிப்படியாக வழங்கின.

அண்மையில் குவேய்ற் (Kuwait) நாட்டு மன்னன் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கினார். ஆனால் பாராளுமன்றத்தினது இஸ்லாமிய அங்கத்தவர்கள் மன்னனது பிரகடனத்தை 20 வாக்குகளால் தோற்கடித்தனர். தாம் ஜனநாயக முறைப்படியே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப் போகின்றார்களாம்! மத்திய கிழக்கு நாடுகளில் குவேய்ற் மட்டுமே பாராளுமன்றம் உள்ளது.

பிரித்தானியாவினது பாராளுமன்றத்தையே 'பாராளுமன்றங்களினது தாய்' (Mother of Parliament) என வர்ணிப்பர். இங்கும் 19-ம் நூற்றாண்டிலேயே பெண்களுக்கு வாக்குரிமை கொடுபட்டது!!!

வாக்குரிமையை விடுமைய்யா — எமது கோவில்களில் கடவுளின் சன்னிதானத்தின் முன்பு, பெண்களுக்கு சம உரிமை கிடைக்கின்றதா? ஓர் பகுதியினருக்கு நாம் சம உரிமையை மறுப்பதை கடவுள் ஏற்றுக்கொள்வாரா? சிந்தியும்.

கு. மகேந்திரன்
அரியாலை

கே : ஸிம்பாப்வே (Zimbabwe) ஜனாதிபதி றொபெற் முகாபே (Robert Mugabe) 75 வயதில் மீண்டும் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளாரே?

பதில் : அதிசயமல்ல இவரது அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என நாட்டில் குரல்கள் எழுந்தன. 400 அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்றினை அமைத்தார். இதில் சிலர் அரசாங்கத்தில் குற்றம் காணும் விமரிசகர்களும் ஏனைய பெரும்பான்மையானோர் முகாபேயினது ஆதரவாளர்களுமே அமைந்தனர்.

சுமார் 10 லட்சம் மக்கள் குழுவினது விசாரணைக்கு வருகை தந்து அபிப்பிராய சாட்சியமளித்தனர். அவர்களது ஒட்டுமொத்தமான முடிவு, ஜனாதிபதியினது ஆளும் காலத்தையும்

அதிகாரங்களையும் குறைத்து மட்டுப்படுத்த வேண்டும் என்பதே?

இறுதியில் மக்களது சாட்சியங்களை விசாரணைக் குழு விவாதித்தது. நீதிபதி கொட்பிறி சிட்யாசிக்கு (Godfrey Chidyausiku) என்பவரே குழுவினது அவைத் தலைவர்; இவர் முகாபேயினது சகா. சடுதியாக, விவாதத்தின் மத்தியில், அவைத் தலைவர் Gavel என்னும் எச்சரிக்கும் சுத்தியல் போன்ற கட்டையால் ஓங்கி மேசையில் அடித்தார். நிசப்தம்.

'ஜனாதிபதி முகாபேயினது அதிகாரங்கள் மாற்றம் எதுவும் இல்லாது, முன்பு போல் இருக்கும் என்றும்; அவரது ஆட்சிக் காலம், மேலும் இரு 05 வருடதவணைகளுக்கு நீடிக்கப்பட்டுளதென்றும், இக்குழுவினது ஏகமனதான தீர்ப்பு', என பிரகடனம் செய்தார். வாக்கெடுப்பு எதுவுமே நடைபெறவில்லை.

இந்த வினோத தீர்ப்பினால் 75 வயதான முகாபே 85 வயது வரைக்கும் சிம்பாப்வே நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிக்க இடமுண்டு.

செல்வி அற்புதராணி,
அச்சுவேலி.

கே: ஐக்கிய அமெரிக்காவினது சரித்திரத்தில் முதன் முறையாக ஓர் யூத இனத்தவரை பிரதி ஜனாதிபதியாகப் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாராமே! ஏன் இந்த இனப் பாகுபாடு?

பதில்: அம்மா, இன்று நேற்றல்ல — பின்னாபின்னமாக தமது இஸ்ரயேல் நாட்டை விட்டு யூதர் உலகெங்கும் இடம்பெயர்ந்தனர்.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலத்தில இலக்கியம் படைத்த நாடகாசிரியர் 'வில்லியம் ஷேக்ஸ்பியர்' தனது Merchant of Venice நாடகத்தில் ஒரு யூத இனத்தவனையே வட்டிககுப் பணம் கொடுப்பவனாகச் சித்தரித்துள்ளார். வாங்கிய கடனைத் திரும்பக் கொடுக்க இயலாதவனிடம் இருந்து ஒரு இறாத்தல் சதை வெட்டித் தரவேண்டும் என்ற பகிடி ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி வாதாடும் யூதன் என வர்ணித்து, யூத இனத்தைச் சிறுமைப்படுத்தினார்.

இருந்தும், யூத இனத்தோர் திறமைமிக்கோர், புத்திக் கூர்மையுள்ளோர். இரு யூத தத்துவ ஞானிகள் உலகத்தையே ஆட்டிப்படைத்தனர்; ஒன்று நசரேத்தின் 'யேசு' மற்றவர் 'பொது உடமை', போதித்த கார்ள் மாக்ஸ் (Carl Marx).

யூத இனத்தோரது தனித்துவத்தையும், அவர்களது சாமர்த்தியத்தையும் பார்த்துப் பொறாமை கொண்டோரது இயலாத் தன்மையே யூதரை வெறுக்கக் காரணம் என்பது எமது கருத்து. □

# Sports Stories with Kennard Uncle (01)

Kennard Uncle 70 வயது முதிர்ந்த, இளைப் பாறிய அரசாங்க உத்தியோகத்தர். இவர் தனித்து வாழும் ஓர் புத்தகப் புழு இவருக்கு சிறு பிள்ளைகளில் மிகவும் பிரியம்.

அயலில் உள்ள பிள்ளைகளான Judy, Maxmy, Edith ஆகியோருக்கு இவர் சொல்லும் சுவையான, உண்மைச் சம்பவக் கதைகள் இவை.

இவற்றை நாம் இலகு ஆங்கிலத்தில் தருகின்றோம். கடுமையான சொற்களை தவிர்த்துள்ளோம்.

தவிர்க்க முடியாதவையினது கருத்துகள் தரப்பட்டுள்ளன.

உங்களுக்கு பொது அறிவையும், ஆங்கில ஆற்றலையும் இக் கதைகள் வழங்கும்.

## Doctor W. G. Grace

Kennard Uncle is at his writing table. The table is near a window. He can see his front gate through this window.

He has just had his morning cup of coffee. There is a Thermos flask and a glass tumbler on the table. The tumbler has some dregs (எஞ்சிய) of coffee in it.

He is searching for something among the numerous (எண்ணற்ற) books, magazines and newspapers on the table.

In walks next door teenage girls Judy and Maxmy. They are wearing (அணிந்துள்ளனர்) black and green skirts and white shirts. Judy's hair is in a lovely pony tail and Maxmy's is bobed in a nice flowing style. Their individual (தனிப்பட்ட) styles suits their vivacious (குதூகலமான) character.

'Good morning uncle,' they greet Kennard Uncle.

He looks up at them, still searching, and says, 'Hello Dears, come in ---- come in.'

He glances (கண்ணோட்டம்) at the front gate and seeing no one, asks of them, 'Where is your Edith?

'She has gone to, the market with her Mumma,' says Maxmy the mischevious (குறும்புத் தனமாக) with a sly grin, 'she promised to bring some ice - cream for us'.

Judy, the serious one, walks up to the table and asks helpfully, 'Ken uncle, what are you looking for?'

'I have misplaced my specs, child,' he replies.

Immediately there is a peal(கணீரென்ற சிரிப் பொலி) of laughter from Maxmy. Judy with a sympathetic (இரக்கமுள்ள / தயையுள்ள) smile reaches (எடுக்க, கை நீட்டுவது) out and removes his pair of spectacles (சோடி மூக்குக்கண்ணாடி) from his forehead (நெற்றி) and gives it to him.

He looks at them with a sheepish grin (அசட்டுச்சிரிப்பு) and asks, 'Whose story do you want to hear today?'

'Tell us,' says Maxmy, 'about the South African cricketer Hansie Cronje.'

'Ah! That's a sad affair,' says Ken uncle with a nod, and continues (தொடர்ந்தார்).

'Today I'll tell you about an interesting anecdote (ஓர் நிகழ்ச்சியின் விவரணம்) of Dr. W.G Grace.'

Ken uncle continued, 'Dr. Grace was the Captain of England Cricket Team'

At that time, in came running Edith, her plaited (பின்னிய) hair dancing on her shoulders (தோள்களில்) shouting, 'Hey uncle, just a minute,' and placing a plastic bucket and some spoons on the table, pleads (இரந்து கேட்டாள்) 'Please uncle, tell me the story from the beginning,' and tells Judy and Maxmy, 'There's your ice - cream —— mummy, says you'll become fat like a pig if you eat too much.'

'Ok, ok, Judy instructs (உத்தரவிட்டாள்) 'Hey Max, run to the kitchen (சமையலறை) and fetch (கொண்டு வா) four cups please.'

Ken uncle is beaming (முகமலர்ந்து) with a smile.

Maxmy brings the cups. Judy dishes out the ice - cream. All three of the children sit

down on the floor. They are licking (நக்குதல்) their spoons and look at Ken uncle eagerly.

Ken uncle once again begins the story of Dr. Grace the Cricketer.

'Alright girls,' he begins. 'Dr. Grace was the English Cricket Captain. He was a big made man, with a luxuriant (அபிதமான வளர்ச்சியுடைய) beard. He was a powerful batsman and also quite a good bowler as well. People flock (கூட்டமாக செல்வது) to see him play.'

'In the late 1800s an England Cricket Team was proceeding (சென்று கொண்டிருந்தது) to Australia to play Test Matches there.'

'In those days there were no aeroplanes for travel. Only steam (நீர் ஆவி) ships. And they normally call over (வந்தடைவார்கள்) at Colombo for a few days.

'The English Team disembarked (கப்பலில் இருந்து இறங்குவது) and rested in a hotel. The following day a cricket match was arranged as a practise match for the visiting England Players. The match was to be played at Galle Face Green.'

'Why at Galle Face Green uncle?' interposed (குறுக்கிட்டுச் சொல்வது) Maxmy.

'Shut up and listen to the story, you silly goose,' retorted Judy. (silly gooseமுட்டாள், மடமையான, மொக்கு என்னும் கருத்துடைய ஆங்கிலப் பதம். Retortedகோபத்துடன் எதிர்த்துக் கூறல்).

'Alright, alright ......,' pacified (சாந்தப் படுத்தினார்) Ken uncle and explained, 'probably because there were no cricket grounds in Colombo in those days.'

'Well, a motley (பல தன்மைகள் நிறைந்த) crowd gathered to watch the match. The Umpires walked in, followed by the local team as fielders. Then came the great Dr. Grace and his partner to open the batting.'

'Here Judy interrupted with a question, 'Is he a real doctor, Ken uncle?'

'Yes child,' replied Ken uncle, while Maxmy winked (கண் சிமிட்டுதல்) at Edith and mouthed (சப்தமின்றி உச்சரித்தல்) 'silly goose.'

Ken uncle continued, 'He was a Doctor alright, but he played cricket most of his life.'

'Now here is the interesting part,' said uncle Ken, and the three kids listened with attention.

'Well, Dr Grace and his partner reached (சேர்ந்தனர் / அடைந்தனர்) the pitch. The Doctor took guard, looked around the field, took stance and faced the bowler.

The bowler came running in and delivered the first ball of the match. And the Doctor played an unhurried (அவசரப்படாது) forward stroke.'

Some how or the other, the great man missed. The ball flew past him, between bat and pad, and struck the stumps. A bail fell. And he crowd gasped.

'There was a jubilant (மிகச் சந்தோஷமான) appeal from the bowler The lone fore-finger of the local umpire raised above his head.'

'The Doctor did not walk away'.

'But why——' interjected (இடை மறித்துச் சொன்னது) Edith in surprise.

'Come on girl, listen carefully and you'll know why,' said Judy, with sarcasm (கேலிச் சொல்)

'The Doctor stood his ground. People did not comprehend what was taking place,' Ken uncle continued.

'The Doctor, a tall, huge man first glared (முறைத்த பார்வை) at the bowler.

Then he focused on the local umpire. His stare (உற்றுப் பார்வை) was so intense (அழுத்தமாக) the up-raised fore-finger began to descend gradually.'

'Then Doctor Grace, shouted at the poor local man of a hapless umpire, 'Not out. People have come to see me bat. Not to see you umpire.'

'Then he addressed the bowler, 'Now carry on as usual,' and he took his stance and went on to bat for quite a while,' completed Ken uncle.

'But is'nt it shameful behaviour on his part?,' asked Judy.

By today's standards, yes it is shameful. But in those Colonial days those things took place. For an Englishman, a local bowler and umpire were yet sub-humans, who were far below him.'

'But that's highly wrong,' cut in Edith the girl with a sense of Justice.

'Yes, child.' Ken uncle told her, 'you' are right. But that's what happened on that morning some hundred and fifty years ago.'

'Tomorrow you all come back and I'll tell you about a truly great man Frank Worell, the West Indies Captain, and his Team-mate Basil Butcher.'

And the girls rose up and went home in anticipation (எதிர் பார்த்தது) of a pleasant hour with Ken uncle on the following day.

---

Doctor William Gilbert Grace ஓர் மருத்துவ கலாநிதி. ஆனால் வாழ் நாள் பூராவும் Cricket விளையாட்டிலேயே ஈடுபட்டார்.

இங்கிலாந்தின் விக்ரோறியா மகாராணியினது காலகட்டத்தில் அதி சிறந்த கிறிக்கற் ஆட்டக்காரர் என புகழடைந்தார்.

இவர் பல சாதனைகள் படைத்தார். அவற்றிற் சில :

1. ஓர் ஆண்டில் 10 சதங்கள் (100 ரன்கள்) அடித்த முதல் வீரர். (1871ல்).

2. 2,000 விக்கற்கள் வீழ்த்திய முதல் வீரர்.

3. 100 சதங்கள் அடித்த முதல் வீரர்.

இங்கிலாந்துக்கும், அவுஸ்ரேலியாவுக்கும் இடையில் முதல் தடவையாக 1880-ம் ஆண்டு ரெஸ்ற் போட்டி இங்கிலாந்தில் நடந்தது. அதில் இவரும் பங்கு கொண்டார். முதல் தர ஆட்டங்களில் (First Class Matches) 54,896 ஓட்டங்கள் பெற்ற இவர் 2,876 விக்கற்களையும் வீழ்த்தியுள்ளார்.

18.07.1848 – ல் பிறந்த இவர் 23.10.1915 – ல் மரணித்த போது, இவரை ஓர் 'தேசிய மகனாக' இங்கிலாந்து மக்கள் போற்றினர்.

---

O Sweden (ஸ்வீடன்) நாட்டில் 450 வருடங்களாக சமயத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இருந்து வந்த இணைப்பினை இவ் வருடம் உத்தியோக பூர்வமாக துண்டித்துள்ளன.

O Cuba (க்யூபா) நாட்டினது ஜனாதிபதி Fidel Castro (பிடெல் கஸ்றோ) வினது மகள் 1993 - ம் ஆண்டு தனது நாட்டை விட்டுத் அமெரிக்காவுக்கு தப்பி ஓடி விட்டார். தகப்பனாரை சர்வாதிகாரி என கடுமையாக விமர்சிப்பார்.

சிறுகதை

# கேட்டது கிடைத்தது

செல்வி ஜெகதீஸ்வரன் ஜெறேகா
வயம்ப பல்கலைக்கழகம்.

பிரயாண மத்தியில், கப்பல் சமுத்திரத்தில் மூழ்கியதால், மூன்று நபர்கள் ஓர் மனிதர் இல்லாத தீவொன்றில் கரை சேர்ந்தனர்.

தத்தமது குடும்பங்களை எண்ணி, எண்ணி இருவர் ஏங்கினர். அவர்கள் தமது வீடுகளுக்குச் செல்ல பெரிதும் விரும்பினர்.

மூன்றாம் நபரோ எவ்விதக் கவலையும் இல்லாது வெகு நிம்மதியாகக் காணப்பட்டார்.

ஓர் நாள் இவர்கள் ஒரு மாயஜால விளக்கு ஒன்றினைக் கண்டெடுத்தனர். அதனை உரசியதும் வருடக் கணக்காக அடைபட்டிருந்த பூதம் இவர்கள் முன் தோன்றித் தன்னை விடுவித்ததற்கு நன்றி கூறி, ஆளுக்கொரு வரம் கேட்கச் சொன்னது.

முதலாமவர், 'என்னை எனது வீட்டிற்கு இட்டுச் செல்,' என்றார்.

'வூஷ்ஷ்ஷ்,' அவர் வீடு சென்றார்.

இரண்டாமவரும், 'என்னையும் எனது வீட்டிற்கு கூட்டிச் செல்,' என்றார்.

'வூஷ்ஷ்ஷ்,' அவரும் அவரது வீட்டிற்குச் சென்றார்.

மூன்றாமவர், சற்று யோசித்து விட்டு, 'எனக்கு இந்த இடம் பிடித்துக் கொண்டது, ஆனால், அவர்கள் இல்லாமல் சிறிது தனிமையாக உள்ளது. எனக்கு அவர்கள் இருவரும் வேண்டும்,' என்றார்.

'வூஷ்ஷ்ஷ்', 'வூஷ்ஷ்ஷ்' இருவரும் வந்து சேர்ந்தனர்.

SHORT STORY

# Unicorn in the Garden

## By James Thurber

Once upon a sunny morning a man looked up to see a 'White Unicorn', with a golden horn, quietly eating the roses in his garden. The man went to the bedroom where his wife was still asleep and woke her.

''There is a Unicorn in the garden'', he told her, ''Eating roses''.

She opened one unfriendly eye and said, ''The Unicorn is a mythical animal'', and continued with a dark stare at him, ''Now allow me to sleep a little''.

The man slowly walked out into the garden and fed the Unicorn a lily flower. The Unicorn ate it gravely. Happily he rushed back into the house, woke his wife yet again, ''The Unicorn'', he said to her, ''ate a lily''.

The wife looked at him coldly, ''You are a booby'', she said, ''and I am going to have to put you in the booby hatch''. And she telephoned the police and also a psychiatrist.

They came and sat down and looked at her with great interest. ''My husband'', she said, ''saw a Unicorn in our garden this morning''.

The police looked at the psychiatrist and the psychiatrist looked at the police.

''He told me it ate a lily'', she continued, ''and had a golden horn in the middle of its forehead''.

The Police looked at the psychiatrist. The Psychiatris looked at the Police.

At a solemn signal from Psychiatrist, the Police leaped and seized the wife. She put up a terrific struggle, but they finally got her into the strait jacket.

"Did you tell your wife you saw a Unicorn?', asked the Police.

''Of course not'', retorted the husband,. "The Unicone is a mythical beast'', he said.

''That's all I wanted to know'', said the Psychiatrist, and told the police, "Take her away''.

Then he turned to the husband, ''I am sorry Sir'', he said with sympathy, ''but your wife is as crazy as anyone could be,'.

So they took her away, cursing, and screaming, and shut her up in a Mental Care Institution.

The husband lived happily ever after.

**(Moral : Don't count your boobies until they are hatched)**

An apology to Reader : You may have read the original and are perturbed at the changes. We simplified to suit our need. Thank you. — Editor


சீமாட்டி

நாளுக்கோர் புதுமை
சுபமுகூர்த்தப் பட்டு, பருத்தி புடவைகளின்
கைராசி நிறுவனம்
' புடவைக் கடல் '

122, Power House Road, Jaffna.
Phone : 0094 - 21 - 2196 Fax : 021 - 2102

# இப்படியும் வேண்டுமா ? !

'ஆண்டவனின் பத்துக் கட்டளை மீளமைப்பு' இது ஓர் போலிக் கிறீஸ்த்துவ அமைப்பு, கத்தோலிக்க சபையினால் விலக்கப்பட்ட மூன்று குருமாரும் இரு சகோதரிகளும் இதை நடாத்தினர்.

'இரண்டாயிரம் ஆண்டில் உலகம் முடியும். சகலரும் அழிவர்: நாம் மோட்ஷத்திற்கு போக வேண்டும். ஏனையோருக்கு முன் செல்ல வேண்டும்; சகல சொத்துக்களையும் விற்று, நாம் ஒன்று கூடி, கடவுளை தியானித்து, மோட்ஷம் செல்வோம்.'

இதுவே அந்த ஐவரின் பிரச்சாரம். சென்ற மார்ச் மாதம் மரப்பலகைகளினால் உருவாக்கிய கோவிலினுள் 235 மக்கள், தமது சிறு பிள்ளைகளுடன் உட்சென்றனர். கதவு, யன்னல்கள் பூட்டப்பட்டன. பல மணி நேரம் செபங்கள் ஓதப்பட்டன. சடுதியாக கோவிலுக்கு நெருப்பு வைக்கப்பட்டது. அவல ஓலங்கள் கேட்டனவாம். ஓர் சில நிமிடங்களில் சகலரும் எரிந்து கரி முண்டங்களாஇனர்.

இச் சம்பவம், ஆபிரிக்காவில், இடி அமீன் ஆட்சிக் காலத்தில், கொடூர அட்டூழியங்களுக்கு பிரசித்தமான, உகண்டா நாட்டில் நடந்தது. ஓரிரு வாரங்களில் அக் கோவிலைச் சுற்றி வேறு பாரிய புதை குழிகள் கண்டு பிடிக்கப்பட்டன: இவற்றுடன் ஒட்டு மொத்தமாக 900 மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என கணிக்கின்றனர்.

இச் சபையின் தலைவர் அசுமான் முவெகன்யி யையும் சகாக்களையும் பொலிஸார் தேடுகின்றனர்;

கடவுளின் பெயரால் ஏமாற்று வித்தை செய்வர் ஓர் சிலர். ஆனால் இது கொடுமை.

☐ John Wesley — என்னிடம் பணம் இருந்தால் அதை நான் சீக்கிரமாக அப்புறப்படுத்தி விடுவேன்; அல்லது பணம் எனது மனதில் குடி கொள்ளத் தொடங்கிவிடும்;

# அங்கை . . . என்னவாம் ? ! !

(8ம் பக்கத் தொடர்ச்சி)

2. இராணுவத்தினது பிரதிநிதி செனற் சபையில் அங்கம் வகிப்பார்;

3. தனது வாழ்க்கை முழுவதும் செனற் சபை அங்கத்தவராக பதவி வகிப்பார் அகொஸ்ரோ பினோசேஷ இம் மூன்றாவது சரத்தின் மூலம் இவருக்கெதிராக எந்தவொரு வழக்கும் அந் நாட்டில் தாக்கல் செய்ய இயலாது.

இப்படியாக தனது அட்டூழியங்களுக்கெதிராகக் காப்புறுதி செய்து கொண்டவர், 17 வருடங்களின் பின் 1990 ல் பதவி யிறங்கினார்.

இதன் பின்னர் இரு ஜனாதிபதிகள் அரசாங்கம் அமைத் தனர் 1) Frei, 2) Patricio Alywin இவ் இரு அரசாங்கங் களினாலும் 1980 ம் ஆண்டு அரசியல் யாப்பை மாற்றியமைக்க முடியாதாயிற்று.

இவ் இயலாமையை முடிவுக்குக் கொண்டு வருவேன் என உறுதியளித்தே றிக்காடோ லாகோஸ் ஜனாதிபதியாக சென்ற 3-ம் மாதம் பதவியேற்றார்.

பினோஷேக்கு Ugarte என்ற பெயரும் உண்டு. ஜனாதிபதி லாகோஸ்க்கு Escobar என்னும் பெயரும் உள்ளது. பினோஷே யினது நடவடிக்கையில் உயிர் இழந்த ஜனாதிபதி அலன்டே யினது பொதுவாகப் பாவியாத பெயர் Gossens என்பதாகும்.

## 07. முன்னைய சோவியற் ஒன்றியம்

இரண்டாம் உலக யுத்த காலம் ஹிற்லரது ஜேர்மனி படைகள் றஷ்யாவினது எல்லையில் நின்றனர். றஷ்ய தலைவர் Marshall Josip Stalin செசென்ய சமுதாயம் முழுவதையும் அப் புறப்படுத்தி, 1000க்கணக்கான மைல்கள் தொலைவில் உள்ள மத்திய ஆசியாவுக்கு விரட்டுமாறு உத்தரவிட்டார். இவர்கள் ஜெர்மனியருக்கு ஒத்தாசை வழங்குகின்றார்கள் என்பதே கார ணம்; ஆனால், அச்சமயம் ஜெர்மனி படைகள் 100க்குப் மேலான மைல் தொலைவிலேயே தரித்திருந்தனர்.

ஸ்ரலின் 1950 களில் இறந்த பின்னரே செசென்யர்கள் தமது சொந்தப் பிரதேசத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். என்ன அநியாயம்? !

## 08. Ukraine

முன்னைய சோவியத் ஒன்றியத்தினது உலக Pole Vault சம்பியன் Sergey Bubka இவர் பல வருட காலமாக தனது தேசிய சாதனை உயரத்தையும், உலக சாதனை உயரத்தையும் சிறிது சிறிதாக, படிம்படியாக உயர்த்திக் கொள்ளுவார்.

சாதனை படைக்கும் ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும், பல அரசாங்க சலுகைகள் கிடைக்கும். ஒரேயடியாக உச்சத்திற்கும் போனால், அதன் பின்னர் சாதனையும் இல்லை, சலுகையும் கிடையா !

இவர் தொடர்ச்சியாக 6 தடவைகள் உலக சாதனை படைத்தார். ஆறாவது தடவையாக 1997ம் ஆண்டு உலக சாதனையாக 6. 01 மீற்றர் (19 அடி 8 1/2 அங்குலம்) உயரத்தைப் பாய்ந்தார்.

இவரிடம் ஸிட்னி நகரில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டில் குறைந்த பட்ச உயரத்தைக் கடக்க முடியாது போனதால் போட்டிகளில் பங்குபற்ற இயலவில்லை.

இவர் ஓர் உக்ரேய்ன் நாட்டுப் பிரஜை.

## 09 Crotia

க்றோஷியா முன்னைய யுகோஸ்லாவியா வின் ஒரு பகுதி கடும் உள்நாட்டுப் போரின் பின்னர் General Franjo Tudjman தலைமையில், ஜனாதிபதி Slobodan, Milo Sevich ன் பிடியில் இருந்து, 1997 ல் சர்வதேச நாடுகளின் உதவியுடன் விடுதலை பெற்றது.

ஜெனறல் ருஜ்மான் ஒரு இனவெறியர். இவர் ஸேபியர்களை வெறுத்தவர்; இவர்களும் போரின் போது திட்டமிட்டு, க்றோஷிய பெண்களை கற்பழிக்கும் முகாம்களில் அடைத்து, மானபங்கப் படுத்தி, விரும்பாத பிள்ளைகளை உருவாக்கினார்கள்.

க்றோஷியாவில் இருந்து ஸேர்பியாவுக்கு. போரின் போது தப்பி ஓடிய ஸேர்பியர்களை மீண்டும் க்றோஷியாவுக்குள் அனுமதிக்க மறுத்துவிட்டார்.

ஜெனரல் ருஜ்மான் ஜனநாயக முறையில் அரசாங்கம் அமைத்து ஆட்சி புரிந்தாலும்; அவர் பிறரது அபிப்பிராயங்களை மதியாது, தன்னிட்சையாக நடப்பவர். இவ் வருட தொடக்கத்தில் மரணமானார். இவரது இறுதிச் சடங்கில் எந்தவொரு நாட்டுத் தலைவரும் பங்குபற்றவில்லை.

Stipe Mesic அடுத்த ஜனாதிபதியாக தெரிவுசெய்யப் பட்டார்.

இவர் ஓடிப் போன ஸேபியர்கள் மீண்டும் க்றோஷியாவில் உள்ள தமது சொந்த வீடுகளுக்கும் வேலைத் தலங்களுக்கும் வந்து சேரலாம் என பரந்த மனத்துடன் பிரகடனம் செய்தார். முழு உலகமும் அவரைப் பாராட்டியது.

ஸ்ரீப் மெஸிக் அரசாங்கம் அமைத்து பதவி ஏற்கும் வைபவத்திற்கு 14 நாட்டுத் தலைவர்கள் பங்குபற்றி கௌரவித்தனர்; ஸேபியரை வெறுப்பது க்றோஷியாவில் இப்போது பொதுவாக அற்றுப்போனது; இச்சூழ்நிலைக்கு ஜனாதிபதி மெஸிக்தான் காரணம் என ஐக்கிய அமெரிக்காவினது வெளிவிவகார காரிய தரிசி மடேலின் அல்பிறைற் பாராட்டினார்.

# 10. Nasa USA

space Shuttle Endevour இவ் வருடத் தொடக்கத்தில் விண் வெளி சென்றது 06 Astronauts 11 நாட்கள் கடமை புரியச் சென்றனர் என்டெவர் விண்கலம் உலகத்தை கட்டம் கட்டமாக முப்பரிமாணத்தில் (3 Diamension) படமெடுக்கவே சென்றது. இப்படங்களே சொற்பமும் பிழையில்லாத மிக நுட்பமான படங்களாக அமையும் என Nasa (நாசா) கூறியது.

இருந்தும் என்டெவரது பின் பகுதியில் அமைந்த அன்ரனாவில் ஏற்பட்ட கோளாறினால் ஒரு நாள் முன்னதாகவே இறங்கியது. எனினும் 90 விதமான பகுதிகளைப் படம் பிடித்து விட்டதென்றார் நாசா பேச்சாளர்.

இப்படங்களால் இந் நாடுகளினது உருவ அமைப்பு மாறுமோ என வினாவுகிறார் ஓர் அவதானி!

# 11. Football – Soccer

England கால்பந்து ஆட்டக்காரர் Stanley Mathews தனது 85-வது வயதில் சென்ற மாசி (February) மாதம் காலமானார்.

இவர் இங்கிலாந்திற்கு 54 தடவைகள் விளையாடியவர் ஓர் முறை இங்கிலாந்து அணி ஆர்ஜன்ரீனாவிற்குச் சென்றது. அச்சமயம் இவருக்கு 41 வயது: இவரை அவ் அணியில் சேர்க்காது. விட்டுச் சென்றனர். ஆர்ஜன்ரீனா சென்றடைந்த அணி இரு சாதாரண போட்டிகளில் தோற்றதும் — அவசர அவசரமாக இவரை அழைத்தனர். இரும் அழைப்பை ஏற்றுச் சென்று, அர்ஜன்ரீனா அணியை இங்கிலாந்து தோற்கடிக்க உதவினார்.

இவருக்கு எதிராக விளையாடும் அணியின் பயிற்றுனர் தமது வீரர்களுக்கு கூறும் அறிவுறுத்தல்களில் முக்கியமானது ஒன்று : Stanley யின் கால்களை பார்க்க வேண்டாம். பந்தையே பாருங்கள். அவரது கால்களைப் பார்த்தால் நிச்சயம் ஏமாறு வீர்கள், என்பதே.

''Sir'' பட்டம் கொடுத்து 1965-ல் கௌரவிக்கப்பட்ட இவர், தனது 50 வயது வரை Club Matches விளையாடினார்.

இவரது விளையாட்டு வாழ்நாளில் ஒரு தடவையாயினும் குற்றம் காணப்பட்டதோ (Booked), அல்லது மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டதோ கிடையாது அத்தகைய பண்பான மனிதர்.

இன்று இவரைப் போன்று யார் உளர்? (BBC) Football என்பது பல வகைப்படும்.

1. American Football - ஏனையவற்றை விட துரிதம், நுட்பம் அபாயம் இருந்தது.

2. Association Football - இது இங்கிலாந்தில் உருவானது இதனையே Soccer என உலகின் சகல நாடுகளிலும் விளையாடுகின்றனர்.

3. Rugby Football - இதுவும் இங்கிலாந்தில் உருவானது. இதனை Rugger என சில நாடுகளில் விளையாடுகின்றனர் இலங்கையில் கொழும்பு, கண்டி, மலை நாடு (Radalla) பகுதிகளில் ஓர் சிலர் ஈடுபடுகின்றனர். பசிபிக் சமுத்திரத்தில்

உள்ள சிறு தீவான Fiji நாடு Ragger விளையாட்டில் பிர பல்யம் அடைந்த நாடுகளில் ஒன்று எனக் குறிப்பிடலாம்

4. Australian Football - பெயருக்கேற்ப அந்நாட்டிலேயே விளை யாடப்படுகின்றது. இது மேற்குறிப்பிட்ட Rugger-ல் இருந்து சிறிது வேறுபாடானது. அவ்வளவே.

## 12. Serbian General Galeaj

இவர் ஸேர்பியா - பொஸ்னியா போர்க் காலமாகிய 1992 - 1995 களில் பொஸ்னியாவில் நிலைகொண்ட ஸேர்பிய இராணுவ கொமாண்டராக பதவி வகித்தவர்.

இவரையும் இவரது சகாக்களான இரு ஜெனறல்களையும் NATO படைகள் கைது செய்துள்ளனர். இம் மூவரையும் நெதர்லாந்து நாட்டின் Hauge நகரில் ஏற்படுத்தியிருக்கும் சர்வ தேச போர்க் குற்றங்கள் விசாரணைக் குழுவினரிடம் ஒப்படைக்க வுள்ளனர்.

இவர்கள் புரிந்த குற்றங்களில் படுமோசமானது கற்பழிப்பு முகாம்கள் உருவாக்கி ஓர் இனத்தின் பெண்களை திட்டமிட்டு மானபங்கப்படுத்தியது, கொடியவனான Hitler தன்னும் இவ் வாறு நடக்கவில்லை.

## 13. Ivory Coast

மேற்கு ஆபிரிக்காவில் உள்ளது. இது பிரான்ஸ் நாட்டி னது ஆதிக்கத்தில் இருந்ததால் இங்கு பிரெஞ்ச் பாஷையே பிர தானமாகப் பேசப்படுகின்ற பிறநாட்டுப் பாஷை.

பிரித்தானிய ஆதிக்கத்தில் இருந்த அண்டை நாடுகளான ஸியரே லியோன், ரோகோ, கோல்ட் கோஸ்ற் (தற்போதைய கானா) ஆகியவற்றை விட செழிப்பாக இருந்த நாடு தனது அயலில் நடக்கும் போர்களில் ஈடுபடாது நடுநிலைமையை வகித்த நாடு.

இருந்தும், நிர்வாகக் குளறுபடிகளினால் மாதக் கணக்கில் இராணுவத்தினருக்கு ஊதியம் வழங்கத் தவறிவிட்டது சென்ற டிசெம்பர் மாதம் படையினர் சிலர் ஆத்திரத்துடன் செயல்ப் பட்டனர். முக்கிய கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றினர்.

ஜனாதிபதி ஓடிச்சென்று அங்கு நிலைகொண்டிருந்த 500 பிரெஞ்சுப் படையினரது பாசறையில் தஞ்சம் புகுந்தார்.

தற்போதைய இராணுவத் தளபதியின் வரவேற்பின் பிரகாரம், முன்னாள் இராணுவத்தளபதி தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளதாக அறிவித்தார். அத்துடன் ஜனாதிபதியை அவரது பாதுகாப்பிற்காக நாட்டை விட்டு வெளியேறுமாறு தெரிவித்தார், அவரும் அயல் நாடான ரோகோவிற்கு சென்றார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற முன்னாள் தளபதி உடனேயே அடைபட்டிருந்த சகல அரசியல் கைதிகளையும் சிறையில் இருந்து விடுவித்தார்.

பின்னர் சகல அரசியல் கட்சிகளையும் அழைத்து ஓர் தற்காலிக அரசாங்கத்தை உருவாக்கும் படி பணித்தார். ஓர் தேர்தல் நடாத்தி முறையான அரசாங்கம் உருவாக்கப்படும் வரை மட்டுமே தான் பொறுப்பில் இருக்க முடியும் என திட்டவட்டமாகக் கூறியும் விட்டார்.

பதவிக்கு ஆசைப்பட்டு மக்களைக் கொன்று குவிக்கும் ஆபிரிக்க நாடுகளின் மத்தியில், இப்படி ஓர் புண்ணியவானை அடைந்தது, ஐவறி கோஸ்ற் மக்கள் செய்த பாக்கியமே!

# 14. Yugoslavia

சென்ற மாதம் September 24ம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. ஜனாதிபதி மிலோஸவிச் தானே வென்றதாக கூறினார்.

இவருக்கெதிராக போட்டியிட்ட, எதிர்க் கட்சிகளின் பிரதிநிதி, கொஸ்ரனிஸ்ரா தனக்கே வெற்றியென்றார். மிலோசவிச் பதவி துறக்க வேண்டும் என மக்கள் தலைநகர் Belgrade டிலும், வேறு இரு நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தினர். ஆனால், பொலிசார் தலையிடவில்லை.

சேர்பிய சமயத் தலைவரும் பதவி மாறுவதே நாட்டுக்கு நன்மை என தனது கருத்தை தெளிவுபட வெளியிட்டார்.

மிலோஸவிச் எதுவுமே கூறாது அமைதியாக இருந்தாலும், தேர்தல் ஆணையாளர் 2-ம் சுற்றுத் தேர்தல் October 08-ம் திகதி நடக்கும் என அறிவித்துவிட்டார்.

பல மேற்குலக நாட்டுத் தலைவர்கள் ஏகமனதாக மிலோஸவிச் தேர்தலில் தோற்றதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும் என்றனர்.

இதற்கு மாறாக, சேபியர்களுடன் இன ஒற்றுமையும் வழமையாக சேபியர்களை ஆதரிக்கும் றஷ்யர்களது தலைவர் புரின், சேபியர்களது தலைவிதியை சேபியர்களே முடிவு செய்யட்டும் என மிலோஸவிச்க்கு மறைமுக ஆதரவு கொடுத்தார்;

தேர்தலில் தோற்றவர் பதவி விலகிய உடனேயே இப்போது சேபியா மீது விதித்துள்ள தடைகள் சகலதும் விலக்கப்படும், எனக் கூறி அமெரிக்க அதிபர் கிளின்ரன் மேலும் நெருக்கடி கொடுத்தார்.

இது இவ்வாறிருக்க, BBC நிருபர் Jackie Rowland ஐ 48 மணி நேரத்துக்குள் சேபியா விட்டுச் செல்ல வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆனால் BBC அத்யட்சர், இவ் உத்தரவிற்கு எதிராக தாம் தொடர்பு கொண்டுள்ளதாகவும், உத்தரவு மீளப் பெறப்படும் என தாம் நம்புவதாகவும் கூறினார்;

துணிச்சலும், விவேகமும் நிரம்பிய அமெரிக்க வெளிவிவகார செயலர் மடலேன் அல்பிறைற், ஒழிவு மறைவு இன்றி; மிலோஸவிச் போகத்தான் வேண்டும், என அப்பட்டமாகக் கூறிவிட்டார்;

மடலேன் அம்மையாரினது பூர்வீகம் செக் குடியரசைச் சேர்ந்தது; முன்னைய செக்கோஸ்லோவாக்கியா வினது 'செக்' பகுதி.

இவ்வளவு அழுத்தங்களில் இருந்து சிறிது இளக்கம் காட்டும் முகமாக, சேபியா வில்சமரசம் பேசுவதற்காக எமது வெளிவிவகார அமைச்சரை அனுப்புவேன் என்று, றஷ்ய அதிபர் விளாடிமிர் புரின் கை கொடுத்தார்.

இதனை உடனேயே மிலோஸவிச் நிராகரித்துவிட்டார்;

எதிர் கட்சி அணியினரோ மிலோஸவிச் பதவி விலகும் வரை திங்கட்கிழமை 02ம் திகதி தொடக்கம் நாடு முழுவதும் பொது வேலை நிறுத்தம் நடக்கும் என்று விட்டனர்;

ரஷ்ய தலைவர் ஜெர்மனி சான்ஸலர் கெகாட் ஷ்றோடர் இடம் ரெலிபோனில் கலந்துரையாடிவிட்டு, தேர்தலில் மிலேஸவிச் தோற்றுப்போனார் என்பதை நான் எதுவித சந்தேகமும் இல்லாமல் ஏற்றுக்கொள்கின்றேன் எனக் கூறி மேற்குலக நாட்டுத் தலைவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

நாம் அச்சுக்குப் போகும் போது, தலைநகர் பெல்கிறேட் அண்மையில் உள்ள நிலக்கரி சுரங்க தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். சுற்றி வர பொலீஸ் காவலர் தலையிடாது நிற்கின்றனர்.

பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள் ஈறாக சகலரும் வேலை நிறுத்தத்தில் இறங்குவார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அடுத்த இதழில் இதனை விரிவாகப் பார்ப்போம்.

---

☐ மின்சார உபகரணங்களில் உள்ள வயர்களது நிறங்களை 1971-ம் ஆண்டு 04-ம் மாதம் சர்வதேச ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டது பச்சை நிறமும் மஞ்சள் கோடுகள் கொண்ட வயர் பூமிக்குச் செல்வது என்றும், மண் நிறம் அல்லது மங்கிய சிவப்பு மின் சப்ளை செலுத்தும் Live wire எனவும், நீலம் Neutral எனவும் தீர்மானித்தனர்.

ஆதாரம் : RD 1984 March 73

❀ ❀ ❀

☐ Sweden (ஸ்வீடன்) நாட்டினது பாராளுமன்றத்தை Riksdal (றிக்ஸ்டல்) எனபர். இது தனது நாட்டில் உள்ள 12 அணுசக்தி மின் நிலையங்களை மூட வேண்டும் என தீர்மானித்துள்ளது.

ரஷ்யா நாட்டினது Chernobel (செர்நோபில்) அணுமின் நிலையத்தில் நடந்த விபத்தில 300,000 மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இதுவே முதற் காரணம். உலகின் வேறு பாகங்களிலும் சிறு விபத்துகள் நடந்துள்ளன.

---

# சர்வதேச சமகால செய்திகளின் பின்னணிகள்



## 01. Aung San Suu Kyi

1990 ல் பர்மாவில் நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்றார்: ஆனால் இராணுவம் இவரையும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும் தடுப்புக் காவலில் வைத்து, ஆட்சியைக் கைப்பற்றினர்.

இவரது தந்தை Bogyoke Aung San பர்மா நாட்டினது தேசிய இராணுவத்தை உருவாக்கியவர்; இவரது கணவர் ஓர் British பிரஜை. இவர்களது 03 பிள்ளைகளும் வெளிநாட்டில் வசிக்கின்றனர்.

இவரது கணவர் இறக்கும் தறுவாயில் இருக்கும் போது பர்மா இராணுவம் இவருக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்குவோம் என அறிவித்தது. ஆனால் தன்னை மீண்டும் பர்மா நாட்டிற்குள் வரவிடாது தடுப்பார்கள் என்ற காரணத்தினால் கணவரது இறுதிச் சடங்குகளில் பங்குபற்ற இவர் செல்லவில்லை. அப்படி ஓர் வைராக்கிய மனம் கொண்டவர்.

ஐரோப்பிய பாராளுமன்றம் 1990 ம் ஆண்டுக்கான, 'சுதந்திர சிந்தனை' க்கான, Sakharov பரிசை வழங்கியது. இவ் வைபவத்திற்கும் இவர் நாட்டை விட்டு வெளியேறவில்லை.

## 02. Abu Sayaaf

பிலிப்பைன்ஸ் இல் சுதந்திரம் கேட்கும் பயங்கரவாத குழுக்களில் Moro இன குழுவே மிகப் பெரியது. அபு சயா குழு இரண்டாவது,

அமெரிக்க நகரான Chicago வினது World Trade Centre என்னும் அடுக்கு மாடிக் கட்டடத்தை குண்டு வைத்துத் தகர்த்த போது நூற்றுக் கணக்கானோர் இறந்தனர். இச் சம்பவத்தின் சூத்திரதாரி இப்போது அமெரிக்கா வில் மறியல் சீவியம் நடாத்து கின்றார்; இவரையும் விடுவிக்க வேண்டும் என தொடக்கத்தில் அபு சயா குழு கேட்டு விதித்தது சாத்தியமாகவில்லை.

லிபிய நாட்டுத் தலைவர் கேணல் மும்மார் கடாபியினது மகன் Gadaffi Foundation என்னும் ஸ்தாபனத்தினது தலைவர். இவர்களது தலையீட்டினால் பல கைதிகளை அபு சயாவிடம் இருந்து விடுவித்தனர்.

இக் கைதிகளை ஜனாதிபதி கடாபி தனது தலைமையகத் தில் வரவேற்றாராம்.

இந்த அபு சயா குழுவிற்கு Khadaffy Janjalany என்பவரே தலைவர். இக் குழு ஓர் சமயம் பிலிப்பைன்ஸ் தென் பகுதியில் இராணுவ முகாமைத் தாக்கியது, எதிர்த் தாக்குதலுக்கு முகம் கொடுக்க இயலாது, அண்மையில் இருந்த இரு பள்ளிக்கூடங் களில் 53 நபர்களை மனித கேடயமாகக் கைப்பற்றினர்.

இவர்களில் ஆசிரியர்களும், பள்ளிச் சிறார்களும், ஓர் கத்தோலிக்க குருவானவரும் அடங்குவர். அத்துடன், Abdul Midjal என்னும் முன்னாள் போராளியினது இரு உறவினர் களும் அடங்குவர்.

பணயக் கைதிகளில் 20 நபர்களை உணவுக்கும், மருந்து வகைகளுக்குமாக விடுவித்து, ஏனைய 33 பேருடன் தமது பாச றைக்குச் சென்றுவிட்டனர்.

அப்துல் மிட்ஜல் வெகுண்டான். ஓர் ஆயுதபாணிக் குழுவை சேர்த்தான்; கடாபி ஜன்ஜலானி யினது 11 உறவினர்களைப் பிடித்தான், அவர்களில் கடாபி ஜன்ஜலானி யினது கர்ப்பம் தரித்த மனைவியும், ஒரு வயதான மகளும் அடங்குவர். எப்படி வேலை?

பேரம் பேசிய பின்னர், அபு சயா தலைவர் தனது மனைவிக்கும் மகளுக்குமாக 15 நபர்களை விடுவித்தான். மிகுதி 18 நபர்கள் பணயக் கைதிகளாக அடைபட்டுள்ளனர். குருவான வரும் பணயம் தான்!

தென்பகுதி பிலிப்பைன்ஸ் இல் இஸ்லாமிய நாடு கோரும் குழுக்களில் மிகப் பெரியது Moro Islamic Liberation Front இது தென் பகுதியின் மிகப் பெரிய தீவான Mindanao வில் இயங்குகின்றது.

இக் குழு அரசாங்கத்துடன் பேச்சுகள் நடாத்தியது. அபு சயாவுக்கு எதிராக இராணுவத்தை அனுப்பியது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றது. பணயக் கைதிகளை மீட்கவே. இராணுவத்தை அனுப்பினோம் என அரசாங்கம் சமாதானம் சொல்வது வைகும் — பேச்சு நின்றது.

இந்த மொறோ குழுவினர் 3ம் நாள் ஓர் இராணுவ முகாமைத் தாக்கினர். தாக்கிவிட்டு ஓடும் போது, அவ் வழியினால் பஸ் வண்டியில் பிரயாணம் செய்த 70 பயணிகளை மனித கேடயமாகப் பிடித்துச் சென்றனர்.

மொறோ லிபறேஷன், அபு சயா ஆகிய இரு குழுக்களுக்கும் சர்வதேச பயங்கரவாதியான Osama Bin Laden என்னும் அராபிய இளவரசனே உறுதுணை.

பின் லாடனை பிடிக்க உதவினால் 5 மிலியன் டொலர் சன்மானம் தருவோம் என்கின்றது அமெரிக்கா. கென்யா, டன்சானியா நாடுகளில் அமைந்த அமெரிக்க தூதரங்களை குண்டு வைப்பித்துத் தாக்கி 200 க்கு மேற்பட்டோரைக் கொன்ற குற்றம் இவரையே சாரும் என்கின்றது வல்லரசு அமெரிக்கா.

இப்போது பிலிப்பைன்ஸ் நாட்டு பணயக் கைதிகள் விவகாரத்தில், Lybiya நாட்டுத் தலைவர் ஜனாதிபதி Colonel Mummar el Gadaffi பிரவேசித்துள்ளார். இவரும் பயங்கரவாதத்திற்கு பிரபல்யமானவர்.

அப்பாவி மக்களைப் பணயக் கைதிகளாக்கி பணம் பறிப்பதும், மனித கேடயமாகப் பாவிப்பதும், தேச பக்தி மனித நேய செயல்களா என சர்வதேசக் கேள்வியாக எழுந்துள்ளது இன்று.

## 03. Pol Pot

Khmer Rouge உறுப்பின் தலைவர். 1975 ல் கம்போடிய நாட்டினது ஆட்சியைக் கைப்பற்றினார்.

ஓர் புதிய சமூதாயம் அமைப்பதென 10 லட்ஷம் உயர் அதிகாரிகளையும், கல்விமான்களையும், வணிகம் அரசியல் கலைத் துறைகளில் ஈடுபட்ட பெரும் புள்ளிகளையும், கொன்று குவித்தார்.

மேலும், 50 லட்ஷம் நகர்ப்புற மக்களை இடம் பெயர்த்தி நாட்டை அல்லோலகல்லோலப் படுத்தினார். இவரது அட்டூழியங்களை 1979 ல் பிரவேசித்த வியற்நாம் இராணுவம் தடுத்து நிறுத்தியது.

தப்பிக் காட்டுக்குள் ஓடிய இவர் தனது இரு சகாக்களுடன் நடுக் காட்டில், வயசான காலத்தில், உடல் நலம் குன்றி, நாதியற்று, சென்ற வருடம் இறந்ததாக செய்தி வந்துள்ளது.

அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்பது சரியானாலும்; லட்ஷக் கணக்கானோர் பட்ட அவலத்திற்கு ஈடாகுமா? கம்போடியா நாடு 70, 238 சதுர மைல்கள் கொண்ட கிழக்கு ஆசியா நாடு. Phnom Penh (நொம் பென்) இதன் தலைநகரம்.

இங்கு இந்து சாம்ராஜ்யத்தை 8ம் நூற்றாண்டில் 2 வது ஜயவர்மன் ஸ்தாபித்தான்; 12 ம் நூற்றாண்டில், இன்றும் காணப்படும் பிரமாண்டமான Anghor Wat என்னும் கோயில் அமைப்பை 2 வது சூரிய வர்மன் கட்டுவித்தான். 14 வது நூற்றாண்டு தொடக்கம் இவர்களது ஆதிக்கம் மறைந்து போயிற்று.

பிரான்ஸ் நாட்டினது பாதுகாப்பில் 1864 ல் அடங்கிய கம்போடியா நாடு 1953 ல் சுதந்திரம் பெற்று இளவரசர் நொறொடோம் சிகானோக் ஆண்டார்.

இவரை ஜெனரல் லொன் நோல் 1970 ல் சிங்காதனத்தில் இருந்து வீழ்த்தினார். இவருக்கு அமெரிக்க ஆதரவும், உதவியும் இருந்தது.

இருந்தும் 1975 ல் இவரை கொம்யூனிஸ்ற் தலைவரான பொல் பொற் வீழ்த்தினார். இப் பொல் பொற் உடைய இயக்கமே Khmer Rouge( கெமர் றூஜ்) றூஜ் என்பது பிறெஞ்ச் பாஷையில் சிவப்பு.

இங்கு நடந்த சமூக அழிப்பை பார்த்துக் கொண்டிருக்க இயலாத வியற்நாம் 1979 ல் பொல் பொற் ஐ காட்டுக்குள் விரட்டியடித்தது.

சற்றில் ஐநா மூலம் 1991 ல் சமாதானம் உருவாகி 1993 ல் தேர்தல் நடந்து பிரதமர் ஹுங் ஸென் பதவியேற்றார்.

# 04. Boris Nikolayevich Yeltsin

Yeltsin பதவியிறங்கும் போது பிரதம மந்திரியான Vladimir Viladimirovich Putin னை பதில் ஜனாதிபதியாக நியமித்தார்.

புரின் St Petersburg நகரில் 1952 ம் ஆண்டு பிறந்தவர். அந் நகர் பல்கலைக் சமூகத்தில் சட்டப் படிப்பை முடித்து 1975 ல் பட்டம் பெற்றார்.

உடனேயே KGB என்னும் ரஷ்ய உளவுப் பிரிவில் சேர்ந்தார். கிழக்கு ஜெர்மனி யில் 15 வருட காலமாக மேற்குலக நாடுகளினது தொழில் நுட்பங்களை களவாக அறிந்து ரஷ்ய நாட்டு விஞ்ஞானிகளுக்கு ஊட்டுவதில் ஈடுபட்டிருந்தார்.

இவர் கராத்தே, ஜுடோ ஆகியவைகளில் கறுப்புப் பட்டி பெற்ற விற்பன்னர். இன்றும் இவைகளிற் பயிற்சி செய்கின்றார். இவருக்கு அழகான மனைவியும் இரு இளம் பெண் பிள்ளைகளும் உண்டு.

KGB யினது ஓர் பிரிவான FSB என்னும் உள்நாட்டு உளவுப் பிரிவினது தலைவராக இவர் இயங்கியவர். இன்னும் அத் தொடர்புகளை பேணுகின்றார். மொஸ்கோ நகர் குண்டு வெடிப்புகளுக்கும் இவரது தொடர்புகளுக்கும் சம்பந்தம் உண்டா என கேள்வி எழுப்புவோரும் உள்ளனர்.

இதுவரை காலமும் பதவி வகித்த ரஷ்ய நாட்டு ஜனாதிபதிகளில் இவர் வேறுபட்டவர். இவர் குடிப் பழக்கம் இல்லாதவர். வைன் குடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் தண்ணி கலந்துதானாம் குடிப்பார். புகைத்தல் பழக்கமும் இல்லாதவர்.

இவருடன் ஆபிரிக்க (Congo) நாட்டு கறுத்த இன மாணவன் ஒருவர் பல்கலைக் கழகத்தில் படித்தாராம். அவரை சக ரஷ்ய மாணவர்கள் ஏளனம் செய்யும் போது புரின் கறுப்பரை அணைத்து, தனது தாய் வீடு அழைத்துச் செல்வாராம்.

இவர் ஜனாதிபதியாகிய பின்னர் அந்தக் கறுத்த இனத்தவர் ஓர் தபால் அட்டையில் தனது வாழ்த்துக்களை தெரிவித்தாராம். உடனேயே தன் கையினால் கடிதம் எழுதி அக்கறுப்பு

நண்பரை ரஷ்ய நாட்டினிற்கு வரவேற்றுள்ளாராம், இத் தயான சிந்தனை படைத்த ஜனாதிபதி புரின். ஆனால், செசென்யா போரின் அகோரத்தையும், ரஷ்யப் படைகளது மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தும் தன்மையையும் கணித்த அவதானிகள் 'ரஷ்யாவினது முன்னைய Czar ஆட்சிக் காலத்தில், அரச அரண்மனையில், அரச குடும்பத்தினரால் அரவணைக்கப்பட்டு குழப்பம் விளைவித்த 'ரஸ் - புரின்' தான் மீண்டும் ரஷ்யாவில் அவதாரம் எடுத்துள்ளாரோ எனச் சிலேடையாக விலகின்றவர்.

விளாடிமிர் புரின் பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்றதும் உடனடியாக மூன்று நபர்களை பதவி நீக்கம் செய்தார். 1) ஜனாதிபதியின் ஆலோசகரான யெல்ஸ்ரின் அவர்களது மகன், 2) ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ சோதிடராகவும் பிரத்தியேக பாதுகாப்பு படையின் தலைவரான Georgy Rogozin, 3) ஜனாதிபதியினது மாளிகையின் முகாமையாளரான Pavel Borodin இவரது கணிப்பில் மாளிகையின் பெறுமதி 600 பில்லியன் (600ம் 9 சைவர்களும்) டொலர்கள். ரஷ்யா திவாலான நிலையில் இருக்கும் போது 400 மில்லியன் (400ம் 6 சைவர்களும்) டொலர்கள் மாளிகையை புதுப்பித்தல் வேலைகளுக்கென செலவளித்தாராம். மக்களது பணத்தை இப்படியா விரயமாக்குவது எனக் கேட்ட போது, இது மக்களது பணமல்ல எமது பணம் என்றாராம்!

ரஷ்யா வில் 89 மாநிலங்கள் உள்ளன; சகலதும் ஊழல் நிறைந்தது ரஷ்ய மக்களது சராசரி ஊதியம் மாதத்திற்கு 65 டொலர்கள்; இது Moscow விமானத் தளத்தில் இருந்து நகருக்குச் செல்லும் வாடகைக்காரினது செலவிலும் குறைவு. ரஷ்யாவுடன் இருந்து அண்மையில் பிரிந்த Estonia மக்களது சராசரி மாதாந்த ஊதியம் 300 டொலர்கள்!!

(Economist 1 - 7 April 2000).

## 05. Chile

சிலி நாட்டு முன்னாள் இரகசியப் பொலிஸ் தலைவர் Raul Eduardo (Iturriaga) Neumann. இவர் பினோசேயினது நெருங்கிய சகா. இவர் சிலி நாட்டு முன்னைய உப ஜனாதிபதியை Rome நகரில் 1975 ல் கொல்ல எத்தனித்தார். இக் குற்றத்திற்காக 1995 ல் 18 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அச் சமயம் இவர் தலைமறைவாக இருந்தார்.

அக்கொலை முயற்சி சம்பந்தமாக, இப்பொழுது இவர் பிடிபட்டு இத்தாலி நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

அகோஸ்ரோ பினோசேஷ 84 வயதானவர்: மருத்துவ சிகிச்சைக்காக பிரான்ஸ் நாடு செல்ல அனுமதி கேட்டார்: பிரான்ஸ் மறுத்துவிட்டது. பிரிட்டன் நாட்டில மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார், தருணம் பார்த்திருந்த ஸ்பெயின் நாடு இவரை மனித உரிமை மீறல், கொலை, சித்திரவதை குற்றங்களுக்காக தம்மிடம் ஒப்படைக்கும் படி. கேட்டது இத னோடு பிரான்ஸ், பெல்ஜியம், சுவிற்ஸலாந்து நாடுகளும் கேட் டன.

என்ன செய்வது? குற்றவாளிகளை நாட்டுக்கு நாடு ஒப் படைப்பதென ஏற்கனவே ஒப்பந்தங்கள் உள்ளதே!

பிரிட்டன் இவரை வீட்டு மறியலில் வைத்தது. நீதி மன்ற விசாரணைக்கு இவரால் முகம் கொடுக்க இயலுமா என 04 மருத்துவரைக் கேட்டது. நால்வரும், தனித் தனியாக, இவரைச் சோதித்த பின்னர் 'இல்லவே இல்லை' என சான்றிதழ் வழங்கி னர்.

இதன் பிரகாரம் பிரிட்டன் இவரை தனது சொந்த நாடான சிலிக்குச் செல்ல அனுமதித்தது. அவரும் தள்ளாத வயதெனக் காட்டி விமானம் மூலம் வீடு திரும்பினார்.

அவமானம்! முன்னாள் ஓர் நாட்டுத் தலைவன் பிரயா ணம் செய்யும் விமானத்திற்கு, தனது நாட்டு பிரதேசத்திற்கு, மேலாக பறப்பதற்கு ஆர்ஜன்ரீனா நாடு அனுமதிக்க மறுத்து விட்டது.

இருந்தும், இவ் நாட்டு தலைநகரான ஸன்ரியாகோ வில் விமானம் தரையிறங்கியது. எதையுமே தள்ளாத வயதெனக் காட் டிய கிழவன் பினோசே, எவரது உதவியும் இல்லாது, தானாக விமானப் படிகளால் விடு விடுவென இறங்கி, தனது நண்பர் களை நெருங்கி குதூகலித்து உரையாடினார்!

"இவ் வருட சிறந்த நடிகர்" என்ற பட்டத்தை இவரது விரோதிகள் வழங்கினர்.

இவரது வன்ம விரோதியான தற்போதைய ஜனாதிபதி றிக்காடோ லாகோஸ் பதவி ஏற்றபோது பினோசே பிரிட் டனில் இருந்தார். அவ்விடம் இப்போது பினோசேயை என்ன

செப்வீர்கள் என வினவிய போது, அதனை நீதிபதிகள் தீர் மானிப்பார்கள் எனச் சுருக்கமாகக் கூறினார். அவர் தான் ஓர் சட்டத்தரணியாச்சே!

இப்போது உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின் படி பினோஷேயினது வாழ்நாள் செனற் சபை அங்கத்தவர் பதவி பறிபோயிற்று. இவரது 17 வருட கால ஆட்சிக் காலத்தில் புரிந்த குற்றங்களுக்காக நீதி மன்றில் ஆஜராகவுள்ளார்.

# 06. Germany

Helmut Khol நீண்டகால அரசியல் கட்சித் தலைவரும், நாட்டுத் தலைவருமாவார்.

கெல்மற் கோல் தனது ஆட்சிக் காலத்தில் ஓர் சட்டம் இயற்றினார்: ஓர் கட்சிக்கு 20,000 DM க்கு கூடுதலாக பணம் கிடைத்தால், கொடுத்தவரது பெயர், விலாசம் தவறாது அறிவிக்கப்பட வேண்டும்.

25 வருடம் கட்சித் தலைவராகவும், 16 வருடம் நாட்டை ஆண்ட அனுபவசாலி, தான் இயற்றிய சட்டத்தையே மீறியுள் ளார்.

கட்சிக்கு இரகசிய கொடுப்பனவுகள் கிடைத்துள்ளது. இவைகளை சட்டப்படி அறிவிக்காது இவர் மறைத்திருந்தார்.

இவ் இரகசியங்கள் அம்பலமாகின. இத் தொகைகளை அன்பளிப்புச் செய்தது யார் என இவரிடம் கேட்ட போது; உங்களது பெயர்களை வெளியிட மாட்டேன் என சத்தியம் செய்துள்ளேன் - ஆகையால் அவர்கள் யார் எனக் கூற மாட் டேன், என்றார்.

இவ் விவகாரத்தால், இவரது CDU கட்சியின் பிரமுகர் ஒருவர் தற்கொலை செய்தார்.

கெல்மற் கோல் வீழ்ச்சியின் விபரங்கள், விரைவில் வெளி வரும், அடுத்த இதழில் பார்க்கலாம்.

நாம் அச்சுக்குப் போகும் போது !

# 07. Middle East

October மாதத்தில் இரு வாரங்களாக இஸ்ரேலிய இராணு வத்தினரால் கல்லெறியும் பலஸ்தீனியர் சுமார் 100 பேர் உயிர் இழந்துள்ளனர்.

இஸ்ரேலிய பிரதமர் எக்கூட் பறாக்கிற்கும் பலஸ்தீனியத் தலைவர் யசீர் அரபாத்திற்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற இருக்கும் போது இக் கலவரங்கள் தொடங்கியுள்ளன.

இவை தொடங்கக் காரணம் ஓர் சிறு விஷயம். இஸ்ரேலிய எதிர்க் கட்சித் தலைவர் ஏரியேல் சரோன் முஸ்லீம்களுக்கும் யூதருக்கும் மிக முக்கியமான தேவஸ்த்தலத்திற்கு விஜயம் செய்தார். இக்கோவில் ஜெருசலேம் நகரில் உள்ளது.

இவ் விஜயத்தை விரும்பாத சில பலஸ்தீனர் வழமை போல கற்களை எறிந்து கலகம் செய்தனர். இராணுவம் வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. தொடர்ந்தது கலவரம்.

இரு வாரங்களுக்கும், 100 உயிர்களுக்கும் பின்னர் இன்று (15. 10. 2000) அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், அவரது வெளிவிவகார செயலர் மடலின் அல்பிறைற் எகிப்து செல்கின்றனர்.

அங்கு எகிப்து ஜனாதிபதி முபாரக், இஸ்ரேல் அதிபர் எக்கூட்பராக், பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத், ஜோர்டான் நாட்டு அரசர் அப்துல்லா ஆகியோரும் கூடுவர்.

கலவரத்தை நிறுத்தி சமாதானத்திற்கு வழிகோலுவதே அவர்களது நோக்கமாகும்.

---

☐ Oxford English Dictionary யில் 615, 000 ஆங்கிலச் சொற்களை உள்ளடக்கி இருக்கின்றனர்.

ஆனால், வெவ்வேறு தொழில் வட்டாரங்களில் பாவனையில் உள்ளவற்றையும் கணித்தால் 10 லட்சத்திற்கும் அதிகமான சொற்கள் ஆங்கிலத்தில் உள்ளன.

மருத்துவம், கணனி, விமான உற்பத்தி - போக்குவரத்து போன்ற வெவ்வேறு துறைகட்குப் பிரத்தியேகமான சொற்கள் உண்டாம்.

---

SPORTS STORIES – CRICKET : 01

# COURTNEY ANTHONY WALSH

## — *West Indian*

**Money is the root of all evils** இந்தப் பழமொழி எவ்வளவு பொருத்தம்!

விளம்பரதாரர்கள் விளையாட்டுப் போட்டிகளுள் எப்போது கால் வைத்தார்களோ; விளையாட்டு வீரர்களுக்கு பெரும் பணம் எப்போது வந்து சேரத் தொடங்கியதோ; ஒரு போட்டியில் எப்போது தனித் தனிப் பரிசில்கள் வழங்கப்படத் தொடங்கியதோ; அன்று தொடக்கம் Sportsmanship குறைந்து போனது.

சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களை Poster, Sticker, சிறு சிறு படங்கள் மூலமும், TV மூலமும் பிரபல்யப்படுத்தி நட்சத்திரங்கள் (Star) ஆக்கியுள்ளார்கள் விளம்பரதாரர்கள்.

பணத்துக்கு முன்னுரிமை கொடுத்ததும், தானே தன்னலம் நமக்குள் வந்து சேரும், இத் தன்னலத்தை வெல்பவனே Sportsman உத்தம மனிதன். இத்தகைய உத்தமரை இன்று பார்ப்போம்.

Courtney Walsh ன் உருவத்தை விபரித்து Bore அடிக்காமல், கதைக்கு வருவோம்.

இந்தியா விலும் பாகிஸ்தானிலும் 1987 ல் Cricket World Cup, ஒரு நாள் போட்டி, நடைபெற்றது. பாகிஸ்தானுக்கும், மேற்கு இந்திய தீவுகளுக்கும் முதல் சுற்று ஆட்டம். Lahore மைதானத்தில் October 16 ம் திகதி. பொன் நாள்.

முதலில் மே. இ. தீவுகள் 49.3 ஓவர்களில் 216 றன்ஸ். இந்த ஸ்கோரை துரத்திய பாகிஸ்தான் 49 வது ஓவர் முடிவில் 09 விக்கற்றுகளுக்கு 203 றன்ஸ். கடைசி ஓவர். ஒரு விக்கற் இருக்கு: 14 றன்ஸ் வெற்றிக்கு. வெற்றி யாருக்கு? ஒரே டென்ஷன்!

கடைசி ஓவரை கோட்னி வோல்ஷ் போட ஆயத்தம். அப்துல் காதிர் எதிர் பார்க்கிறார். மறு முனையில் சலீம் ஜாபர் ஓடத் துடிக்கிறார்.

காடிர் 05 பந்துகளில் 10 றன்ஸ் எடுக்கார்: இப்போ ஸ்கோர் 213 றன்ஸ் வெற்றிக்கு இன்னும் 04 றன்ஸ் தேவை. போட்டியின் கடைசிப்பந்து:

வோல்ஷ் தனது Long Run-up க் — ஜபார் ஓடக் கரு துருத்து சற்று கிறீஸ்க்கு வெளியே.. கவனித்த வோல்ஷ் சடுதியாக பிறேக் பிடித்து விக்கற்றுடன் நிற்கிறார் ... கையில் இருந்த பந்து பெல்ஸை தடவாத குறை.. ஜாபர் செய்வதறியாது ஸ்தம்பித்த நிலை — வோல்ஷ் ஜாபரை Warn செய்கிறார் — திரும்பி Umpire இடம் சைகை மூலம் நடந்ததை அறிவித்து — மீளத் திரும்பி தனது Marker நோக்கி நடக்கின்றார் வோல்ஷ். மனிதத் தெய்வம். வெற்றி கையில்; இலகுவாக Stump செய்து ஜாபரை அவுட் ஆக்கி ஆட்டத்தை வென்றிருக்கலாம்.

இல்லை: இன்னொரு Chance சிறு வயதினனுக்கு கொடுப்போம், என சிந்தித்தாரா? அல்லது, 04 றன்ஸ் தேவையிருக்க; அவசரப்பட்டு ஒரு றனுக்காக, கடைசிப் பந்தில் அவுட் ஆகி; பெயரைக் கெடுக்கப் பார்த்தானே சிறு வயது மடையன், என எண்ணுகின்றாரா?

கடைசிப் பந்தை வோல்ஷ் வீசினார். காடிர் 04 அடித்தார். பாக்கிஸ்தான் ஒரு விக்கற் றில் போட்டியை வென்றது.

இந்த உயர்தர Sportsman செய்கைக்கென ஓர் விசேட விழாவில் நன் நடத்தை பதக்கம் ஒன்று வழங்கினர். பெறுமதி மிக்க சம்பளம் ஒன்றும், வேறு பல பரிசில்களும் வழங்கப்பட்டு பலரால் போற்றப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்: இவ்வகையாகவே, மனிதன் தெய்வமாகின்றான்.

இன்று கிரிக்கற் உலகில் இங்கிலாந்தில் இருந்து இந்தியா வரை, ஒஸ்ற்றேலியாவில் இருந்து தென் ஆபிரிக்கா வரை, பாக்கிஸ்தான் முக்கியமாக உட்பட, ஒரே லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகள். இவற்றில் இருந்து, மேற்கிந்தியரும் இலங்கையரும். நியூஸிலாந்தர்களும், விதி விலக்கு.

கோட்னி வோல்ஷ் 30 October 1962 ல் Kingston நகரில் Jamaica தீவில் பிறந்தவர்:

தனது தீவுக்கும், பின்னர் 18 Tests களில் மே: இ: தீவுகளுக்கும் கப்டன் ஆக விளையாடினார். மேலும், English County Cricket போட்டிகளில் Gloucestershire அணியிலும் முக்கிய பங்கேற்றார்.

இந்திய வீரர் கபில் தேவ்வினது உலக சாதனையான 434 டெஸ்ற் விக்கற்களை கைப்பற்றினார். குறைந்த போட்டிகளிலேயே இச் சாதனை படைத்தார்.

எவரும் விரும்பாத சாதனை ஒன்றும் இவரைச் சாரும். டெஸ்ற் போட்டிகளில் ஆகக் கூடிய பூஜ்ஜியங்கள். இவர் வழமையில் 10 அல்லது 11 வது நபராகவே களம் இறங்குவார். தற்பொழுது 35 பூஜ்ஜியங்களை. இவனும் எத்தனையோ!

இன்னுமொரு சாதனை படைக்கும் வாய்ப்பும் உண்டு ஆட்டம் இழக்காதிருப்பது Not Outs.

முன்னைய England Captain Bob Wllis 90 டெஸ்ற் களில் 128 இனிங்ஸ் பற செய்து, 55 தடவைகள் Not Out. வோல்ஷ் 156 இனிங்ஸ்ல 52 தடவை Not Out. இன்னும் நாலுகே தேவை,

இவ் இனிமையான வீரரது செயற்திறன் Bowling Department ல் தான் உள்ளது. அவற்றில் சில திறமையானவைகள்

| | | | |
|---|---|---|---|
| 01, | எதிர் நியூஸிலண்ட் | — | 37 றன்ஸ்க்கு 07 விக்கற். |
| 02, | எதிர் ஒஸ்ரேலியா | — | 54 றன்ஸ்க்கு 06 விக்கற். |
| 03 | எதிர் இந்தியா | — | 62 றன்ஸ்க்கு 06 விக்கற். |

மேலும், விக்கற்கள் வீழ்த்தி, பூஜ்ஜியங்கள் பெற்று சாதனைகள் படைக்க வேண்டும், Courtney Anthony Walsh என வாழ்த்துகின்றோம்.

---

☐ சக்கரவர்த்தி ஷாஜெஹான் தனது மனைவி மும்ராஸ் மகால் என்பவரது ஞாபகார்த்தச் சின்னமாக தாஜ்மகாலைக் கட்டினார்.

இதனைக் கட்டி முடிக்க 22,000 மக்கள் 22 வருடங்கள் தொடர்ந்து தினமும் 24 மணி நேரமும் வேலை செய்தனராம்.

19 வருட திருமண வாழ்க்கையில் 14-வது மகப்பேற்றுச் சமயம் மும்ராஸ் இறந்து போனார்.

1628 ல் ஆட்சிக்கு வந்த மன்னன் ஷாஜெஹானை 1658 ல் அவரது மகனான அவ்ரங்கஷேப் தந்தையை அவரது 'சிவப்புக் கோட்டை' யிலேயே சிறையிலடைத்து ஆட்சியைக் கைப்பற்றினான்.

ஷாஜெஹான் தனது மாளிகை அறையினது யன்னலூடாக தான் கட்டியெழுப்பிய தாஜ்மகாலை பார்த்த வண்ணம் வசித்தார்.

ஆதாரம் RD 1984 June 26

# ஒரு இனிங்ஸ்ஸில் 06 கச்சுகள்:

ஒரு நாள் போட்டிகளில் ஒரு சாதனை: இவ் வருடம் March மாதம் South Africa வில் அந்நாட்டுக்கும், Australia க்கும் இடையில் ஒரு நாள் Cricket போட்டிகள் நடைபெற்றன.

Capetown வ நகரில் நடைபெற்ற போட்டியில் Australian Wicketkeeper ஆகிய Adam Gilchrist 06 Catches பிடித்து சாதனை படைத்தார்.

இவ் 06 கச்சுகளில் ஒன்று South African Wicketkeeper! M. Boucher கொடுத்ததாகும்.

இரு நாட்களுக்கு முன்னர் Durban நகரில் நடைபெற்ற Match இல் Boucher 05 கச்சுகள் பிடித்து முன்னைய Record ஐ எட்டிவிட்டார். இனி என்ன அடுத்தது Record தானே!

அதுவும் வந்தது — வலு Simple ஆக — பிடித்தார் — தவறியது — தட்டிவிட்டு மீண்டும் பிடித்தார் — அது தவறியே போய்விட்டது. கைக்கெட்டியது, சாதனைக் கெட்டவில்லையே.

---

# தொடர்பு கொள்ளுங்கள்

வாசகர்களே, மாணவர்களே!

உங்களது ஆக்கங்களை வரவேற்கின்றோம். பொருத்தமானவை பிரசுரிக்கப்பட்டு, சன்மானம் வழங்கப்படும்.

எம்மிடம் இருந்து பதில் எதிர் பார்ப்போர், தவறாது, போதிய தபால் முத்திரை ஒட்டிய கடித உறை அனுப்ப வேண்டும்.

ஆற்றல் ஆசிரியர்,<br>76, கண்டி வீதி,<br>சுண்டிக்குழி,<br>யாழ்ப்பாணம்.

முல்லை அச்சகம்,<br>ஆடியபாதம் வீதி,<br>நல்லூர்,<br>யாழ்ப்பாணம்.

---

Over to you Readers in :

VICTORIA, AUSTRALIA

**JayDi Creative Photography**

Professionally qualified Staff
with
Novel and Modish Ideas

O Engagements O Weddings

O Birthdays O Anniversaries

O Special Occasions you Cherish

**You'd Thank God you rang :**

**0414 233 855**

*When you reminisce with pang,
in retrospect :
Your loved ones, Cherished occasions,
in decades to come.*

Best wishes and welcome to the brand new addition to the family.

இப்பிரசுரம் Readers and Listeners Combine அமைப்பினர்க்காக: ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்திலுள்ள முல்லை அச்சகத்தினரால் 09-11-2000 அன்று பிரசுரிக்கப்பட்டது.